விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 15 புதன்கிழமை (30.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மீன் சந்தைக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை 10 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுடப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் தலையில் படுகாயமடைந்த இளைஞன் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாரிலிருந்து கொழும்புக்கு வந்த யாழ்.இளைஞர்கள் இருவர் கடத்தல்

(கொழும்பு)

கட்டாரிலிருந்து விடுமுறையில் இலங்கைக்கு வந்த தமிழ் இளைஞர்கள் இருவர் கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

கட்டாரில் பணிபுரியும் இந்த இளைஞர்கள் இருவரும் விடுமுறையில் இலங்கைக்கு வந்து கொட்டாஞ்சேனை விவேகானந்தா மேட்டுப் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அங்கு கார் மற்றும் ஓட்டோவில் சென்ற நபர்கள் சிலர் தாம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என்று தம்மை அடையாளம் காண்பித்துக் குறிப்பிட்ட இளைஞர்கள் இருவரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓகஸ்ட் முதலாம் திகதி பொது விடுமுறை தினமல்ல

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்படவில்லையென பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் இந்த விடுமுறை குறித்து எதனையும் அறிவிக்கவில்லையென அமைச்சின் மேலதிக செயலாளர் சுஜாதா வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் பொது விடுமுறை தினமாக சிலர் பொய் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வுக்காகவே இராணுவ நடவடிக்கைகள்

## மடுத் தேவாலயத்துக்கு மன்னார் ஆயர் விஜயம்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினரின் வசம் வந்துள்ள மடுக் கோவில் பகுதியைப் பார்வையிடுவதற்கு கத்தோலிக்கத் திருச் சபையினருக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை விக்டர் கோசையுடன் அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ள மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், ஆலயத்தின் திருத்த வேலைகள் யாவும் இராணுவத்தினரால் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.எல்.பீரிஸ் சிங்கப்பூரில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகவே அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்திருப்பதாக சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.இலங்கையின் இனப்பிரச்சினையை அர சியல் ரீதியாகத் தீர்க்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் இதற்காகவே இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகவும் அமைச்சர் சிங்கப் பூரில் கூறியிருக்கின்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## வெள்ளவத்தையில் பதினொரு பேர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்தின் பேரில் 11 பேர் கைது (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதச் சிறைத் தண்டனை

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானுக்கும் துணை அமைச்சர் முத்து சிவலிங்கம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கும் நுவரெலிய நீதிமன்றம் ஆறு மாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில், இருந்து பிரிந்து சென்ற சதாசிவத்துடன் அலுவலக உரிமை குறித்த வழக்கு ஒன்றில் முன்னதாக நீதிமன்றம் அந்த அலுவலகத்தைச் சதாசிவம் பயன்படுத்த அனுமதித்திருந்தது.

ஆயினும் அந்த உத்தரவை குற்றவாளிகள் மீறியதாகக் கூறி அவரினால் தாக்கல் செய்யப்பட்ட தற்போதைய வழக்கிலேயே இவர்கள் மூவருக்கும் இந்த சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

எனினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பேச்சாளர் ஆர். யோகராஜன் தெரிவித்தார்.

இல ங்கைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான பௌதிகவியல் - I

தரம் 5 புலமைப் பரிசில் (11) பகுதி - I
பாட மாதிரி வினாத்தாள்.

## அதிபர், ஆசிரியர்களுக்கான நியமனங்கள் 3 ஆம் தவணை ஆரம்பத்தில் வழங்கப்படும்

### கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன் தெரிவிப்பு

(திருகோணமலை)

அதிபர், ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான நியமனங்கள் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகும்போது வழங்கப்படும் என வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அதிபர் சேவை தரம் 2,I, தரம் 3 க்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் கையளிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 90 நாள்களுக்கு மேல் தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதம்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

பொலிஸாரால் கைது செய்யப்படும் ஒருவர் 90 நாள்களுக்கு மேல் தடுப்புக் காவல் உத்தரவில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவது சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்துள்ள உயர் நீதிமன்றம்,தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை உடனடியாகச் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளது.

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மோகனரூபன் (வயது-33) என்பவரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான பூர்வாங்க விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் நடை (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாநகர சபையின் 'யாழ் விருது' இம்முறை வைத்திய கலாநிதி (திருமதி) கணேஷமூர்த்திக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டுதோறும் வழங்கி வரும் 'யாழ் விருது' இம்முறை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி (திருமதி) கணேஷமூர்த்திக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபையின் ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஆணையாளர் தலைமையில் கூடிய சைவ சமய விவகாரக் குழுவின் பொதுச் சபை, வைத்திய கலாநிதி (திருமதி) கணேஷமூர்த்தியின் சமூக, மருத்துவ பணியை கௌரவிக்கும் வகையில் இவ்விருதை அவருக்கு வழங்குவது என தீர்மானித்துள்ளது.

நல்லைக்குமரன் மலரின் 16-வது இதழ் வெளியீட்டு விழாவில் இவ் விருது அவருக்கு வழங்கப்படவுள்ளதாக சைவ சமய விவகார குழுவின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

சைவ சமய விவகாரக் குழுவினால் வழங்கப்பட்டுவரும் 'யாழ் விருது' 2006 ஆம் ஆண்டில் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனுக்கும், 2007 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் வே.பொ.பாலசிங்கத்திற்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ந)

## பரீட்சை அனுமதி அட்டை இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

அனைத்துப் பரீட்சார்த்திகளையும் இன்று பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கணேசராஜா அறிவித்துள்ளர்.

(ச)

## சார்க் வெளியுறவு செயலர்கள் அமர்வு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு ஒன்றியத்தின் (சார்க்) தலைவர்களின் 15-வது உச்சி மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அதற்கு முன்னோடியாக அந்த நாடுகளின் வெளியுறவுச் செயலர்களின் மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அமர்வுக்கான தலைமைப் பொறுப்பை இந்திய வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனனிடம் இருந்து இலங்கை வெளியுறவுச் செயலர் பாலித ஹோகன்ன ஏற்றுக்கொண்டார்.

இந்த உச்சிமாநாட்டின்போது அவதானி நாடுகளை எவ்வாறு ஆக்கபூர்வமாக பங்களிக்கச் செய்வது, உணவுப் பிரச்சினையை பிராந்திய ஒத்துழைப்புடன் சமாளிப்பது, பொருளாதார விடயங்கள் குறித்த மேலதிக நடவடிக்கைகள் மற்றும் மாநாட்டின் பிரகடனத்தில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் ஆகியன குறித்து இந்த வெளியுறவுச் செயலர்கள் சந்திப்பில் அலசப்பட்டதாக சார்க் செயற்குழுவின் தலைவரும் இலங்கை வெளிநாட்டமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான தலைமைப் பணிப்பாளருமான கிரேஸ் ஆசிர்வாதம் தெரிவித்தார்.

(ச-5)

## மன்மோகன் சிங் -பாக்.பிரதமர் இலங்கையில் சந்தித்துப் பேச்சு

இலங்கையில் நடைபெற்றுவரும் சார்க் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் பாகிஸ்தான் பிரதமர் யுசுப் ரஸாக் கிளானியும் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களின் சந்திப்புத் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக சார்க் நிகழ்ச்சிக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சார்க் மாநாட்டில் தெற்காசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வரவிருக்கம் இந்திய மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# ரசிகர்களுக்கு விறுவிறுப்பை ஏற்படுத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடாத்தும் விலகல் முறையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்று சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

இவ் இறுதிப்போட்டியில் குருநகர் பாடுமீன் ஏ அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்லஸ் அணி மோதுகின்றது.

இருபது அணிகள் மோதிய இத்தொடரில் குருநகர் பாடுமீன் ஏ அணியும் நாவாந்துறை சென்.நீக்லஸ் அணியும் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி என்பதால் இப்போட்டி விறுவிறுப்பாக இருக்கும், இது உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்தளிக்கும்.

இத் தொடரின் வரலாறு தொடர்பில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி உப அதிபருமான அன்ரனிப்பிள்ளை கிளிபேட் கூறுகையில்,

1970ஆம் ஆண்டு முதல் யாழ்.உதைபந்தாட்ட லீக்கால் யாழ்.மாவட்டம் பூராகவும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத்தொடர் நடாத்தப்பட்டு வந்தது.

சிறிய மைதானம்,குறைந்த நேரம் என்பதால் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி ரசிகர்களிடம்பெரும்வரவேற்பை பெற்றது.

எனினும் 1990 ஆம் ஆண்டு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி நடைமுறைக்கு வந்தமையால் அதில் உள்ள எல்லை தாண்டல்(Osfside) விதி காரணமாக பெரிய மைதானங்கள் தேவைப்பட்டது.

இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் பெரிய மைதானங்களின் வசதியின்மையால் யாழ்.உதைபந்தாட்ட லீக்கால் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் நடாத்த முடியவில்லை.

அத்துடன் தேசிய அணியில் இடம்பெற வேண்டுமாயின் அக்காலப் பகுதியில் யாழ்ப்பாண வீரர்களிடம் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் பயிற்சி தேவைப்பட்டமையாலும் 1990 ஆண்டுடன் யாழ். உதைபந்தாட்ட லீக்கால் நடாத்தப்பட்ட 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடர்முற்றாக நிறுத்தப்பட்டது.

எனினும் இவ்வாண்டு முதல் மீண்டும் இத் தொடரை நடாத்த வேண்டுமென யாழ். உதைபந்தாட்ட லீக்கால் தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இன்று இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

இன்றைய இறுதிப்போட்டிக்கு ரசிகர்கள் பூரண ஆதரவு வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-5)

# இலங்கையின் மனித உரிமைகள் குறித்து நவநீதம் அம்மையாருக்கு விளக்க முடிபு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளராக நியமனம் பெற்றுள்ள திருமதி நவநீதம்பிள்ளையைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளதாக அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்போது இலங்கையில் இருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிரேஷ்ட ஆலோசகருடனும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் நாட்டில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்புட்டுள்ள விசாரணைகள் பற்றிய தேசிய செயற்திட்ட அறிக்கை குறித்து திருமதி நவநீதம்பிள்ளையிடம் தான் விளக்கமளிக்கவுள்ளதாக அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் அவரிடம் எந்தவொரு நேரத்திலும் விளக்கமளிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஏற்கனவே நான் தெரிவித்த மனித உரிமை நிலைவரம் தொடர்பான தேசிய செயற்றிட்ட அறிக்கைக்கு பல நாடுகள் சிறந்த வரவேற்பை அளித்துள்ளன என்றும் அமைச்சர் சமரசிங்க கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

திருமதி நவநீதம்பிள்ளையின் இனத்துவப் பின்னணி குறித்து அந்த ஊடகம் கேட்டதற்கு இன ரீதியாக அவர் தமிழராக இருக்கின்றபோதிலும் அது இலங்கை அரசாங்கத்தினதோ அல்லது நாட்டினதோ விவகாரங்களில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவை பிறப்பிடமாகக் கொண்ட தமிழரும் நீதிபதியுமான திருமதி நவநீதம்பிள்ளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக அண்மையில் நியமனம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)



வலி.கிழக்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு 23ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் கிந்துசிட்டி மயானத்தில் புத்தூர் கலைமதி ச.ச நிலைய அங்கத்தவர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சிரமதான நிகழ்வை படத்தில் காணலாம்.

# விண்ணப்பம் கோரல்

### மோட்டார் வாகன மதுவரி சாரதி வகுப்பு II பதவி

இலங்கை மதுவரித் திணைக்களத்தில் மோட்டார் வாகன மதுவரி சாரதி வகுப்பு II பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும்,45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக 2008.08.01 வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவத்தை தயாரித்து மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல.28 ஸ்ரெப்பின் வீதி,கொழும்பு-2 என்ற முகவரிக்கு 2008.08.28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

### இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIIஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவத்தை 2008.08.01 வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவங்களை தயாரித்து 2008.09.01 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர்,இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவர்களூடாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

இவ்விண்ணப்பக் கோரல்கள் தொடர்பாக மேலதிக விபரங்களை உள்ளடக்கி 2008.08.01வெளியாகவுள்ள வர்த்தமானியை இன்று முதல் வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும்.

(ச)

# இன்று ஒரு தகவல்

## கணவனும் மனைவியும்

ஒருவர் அவசரமாக வந்தார். ‘‘சார்! மனுஷன் நிம்மதியாக இருக்கிறதுக்கு என்ன வழி?’’ என்று கேட்டார்.

‘‘சீக்கிரமாக ஒரு கல்யாணத்தைப் பண்ணுங்க... எல்லாம் சரியாகிவிடும்!’’ என்றேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

ஏற்கனவே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது சார்... அதனால் தான் நிம்மதியாக இருக்கிறதுக்கு வழி கேட்கிறேன்! என்றார்.

“சரி இவரும் நம்ம கேஸ்!” தான் என்று நினைத்து என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தை அவரிடம் கொடுத்தேன்.

‘‘கல்யாணத்துக்குப் பிறகும் சந்தோஷமாக இருப்பதற்கு என்ன வழி?’’ என்ற கேள்விக்கு அந்தப்புத்தகத்தில் விளக்கம் இருந்தது. கணவன் மனைவிக்குள் சிக்கல் வராமல் இருப்பதற்கு அதில் சில வழிகள் சொல்லியிருக்கிறார்கள்.

குடும்பம் என்று இருந்தால் கோபம் வரத்தான் செய்யும் ஆனால் அந்தக் கோபம் ஒரே நேரத்தில் இரண்டு பேருக்கும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சமயத்தில் யாராவது ஒருவர் தான் கோபப்பட வேண்டும். அடுத்தவர் அமைதியாக இருக்க வேண்டும். அதன் பிறகு இவர் அமைதியான பின் அவர் ஆரம்பிக்கலாம்! கோபமாக ஏதாவது சொன்னால் உடனே கோபமாக பதில் சொல்லக்கூடது. கொஞ்சம் பொறுத்து கோபம் தீர்ந்தவுடன் அந்தப் பதிலை சொல்லலாம்.

அற்ப விஷயத்துக்கெல்லாம் கத்திக் கொண்டிருக்கக் கூடாது. உங்கள் இருவருக்கும் ஒரு தர்க்கம் வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். கடுமையாக இரண்டு பேரும் விவாதம் செய்கிறீர்கள். உங்களில் ஒருவர் ஜெயிக்க வேண்டும் என்றால் அது நீங்களாக இருக்காமல் மற்றவர் ஜெயிப்பதற்கு துணையாயிருங்கள்.

ஏதாவது குற்றம் சொல்லவேண்டுமா? செய்த தவறை சுட்டிக்காட்ட வேண்டுமா? விமர்சனம் பண்ணவேண்டுமா? எதுவானாலும் சொல்வதை இதமாக–கொஞ்சம் அன்பாக சொல்லுங்கள்!

எப்பொழுதே நடந்த தவறுகளையெல்லாம் இப்பொழுது மறுபடியும் ஞாபகப்படுத்தாதீர்கள். உங்களுக்கு அவர் தான் பெரிது–அவருக்கு நீங்கள் தான் பெரிது... அதைவிட இந்த உலகத்தில் வேறு எதுவும் முக்கியம் இல்லை என்று நினையுங்கள்.

நீ தான் உலகம் என்று எத்தனை தடைகள் சொல்லியிருப்பீர்கள்? அதெல்லாம் வெறும் “வசனமாக” போய் விடக்கூடாது!

ஏதாவது ஒரு பிரச்சினையைப்பற்றி கடுமையாக விவாதம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள் என்றால் அதை பாதியிலேயே விட்டுவிட்டு படுக்க்கக்குப் போய்விடாதீர்கள். அப்படிப்போனால் தூக்கம் வராது.

பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுத்துவிட்டு அதன்பின் தூங்கப்போவது நல்லது. ஒருநாளில் ஒரு தடவையாவது உங்கள் ஜோடியை பாராட்டி நல்லவிதமாக கனிவாக ஒரு வார்த்தை சொல்லவேண்டும் என்று தீர்மானியுங்கள்.

ஏதாவது தவறு செய்துவிட்டீர்களா? பரவாயில்லை. அதை ஒத்துக்கொள்ளவும், மன்னிப்புக் கேட்கவும் தயாராக இருங்கள். அதில் ஒன்றும் கேவலம் இல்லை. வீட்டுக்குள் தானே கேட்கப்போகிறீர்கள். வெளியில் யாருக்குத் தெரியப்போகிறது! எப்படியோ சமரசமானால் சரி!

இருவர் தகராறு செய்தால் பொதுவாக இருவரில் யார் அதிகமாக பேசுகிறார்களோ அவர்கள் மீது தான் தப்பு இருக்கும்! அதை மனதில் வைத்திருங்கள்.

இதுதான் அந்தப் புத்தகத்தில் போட்டிருக்கின்ற வழிமுறைகள். ஒருவர் தன்னுடைய மனைவியை அழைத்துக்கொண்டு மனோதத் துவ டாக்டரிடம் போனார்.

“டாக்டர்! எங்களுக்குக் கல்யாணம் ஆகி முப்பது வருஷமாக நாங்கள் ஒரு விஷயத்திலும் ஒத்துப்போனதில்லை! என்று ஆரம்பித்தார். உடனே அந்த அம்மா குறுக்கிட்டு “அது முப்பது வருஷமில்லை–முப்பத்திரெண்டு வருஷம்” என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இராணுவ நடவடிக்கை காரணமாக
# துணுக்காய் பலநோக்குக் கூ.சங்கத்திற்கு 14கோடி ரூபா சொத்திழப்பு

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட சொத்தழிவு மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 14கோடி ரூபா சொத்திழப்பு ஏற்பட்டுள்ளது.

முல்லைதீவு, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் தங்கராசா இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார். முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவந்த 13கிளை நிலையங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

அத்துடன் மல்லாவி நகரில் இயங்கிவந்த கூட்டுறவு மாதிரி விற்பனை நிலையம், கூட்டுறவு அரிசி ஆலை, கூட்டுறவு வெதுப்பகம், கூட்டுறவுக் களஞ்சியம், கிராமிய கூட்டுறவு வைப்பகம், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனை என்பனவும் இடம்பெயர்ந்துள்ளன.

மேலும் 80 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும், பொருட்களும் இழக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாதாந்தம் தேவைப்படும் 30 மெற்றிக்தொன் அரிசி மற்றும் அதற்கான நெல் என்பவற்றைக் களஞ்சியப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் விவசாய விளை பொருட்களைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் சந்தைப்படுத்தி வருவதுடன், கடந்த 25 ஆண்டுகளாக விவசாயிகளையும், உள்ளூர் உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து வந்திருந்தது.

துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இடப்பெயர்வினால் விவசாயிகள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# தமிழ் நாட்டு கடற்பரப்பில் புதிய கப்பல் ஒன்று சேவையில்

தமிழ்நாடு மண்டபம் கடற்பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக இந்திய ஒரிசா மானிலத்தில் இருந்து ஷாந் பி.வி என்ற யுத்த கப்பல் பணியில் ஈடுபடுதப்பட்டுள்ளது. இந்த தகவலை தமிழ்நாட்டின் கரையோரக் காவல் பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்த கப்பலில் அதி நவீன ரேடார் வசதிகள் உட்பட்ட அமைப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கப்பல் ஒரு மாத காலத்திற்கு மண்டபம் கடற்பிராந்தியத்தில் கண்காணிப்பு சேவையில் ஈடுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறும் சார்க் மகாநாட்டை முன்னிட்டு தமிழகத்திற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊருடுவலை தடுப்பதற்குமே ஷாந் பி.வி.கப்பல் சேவைக்கு அழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2006ஆம் ஆண்டு ஜுன் 12ஆம் திகதி முதல் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு பெருமளவிலான அகதிகள் சென்ற வண்ணம் உள்ளனர். இதில் அகதிகள் என்ற போர்வையில் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழகத்திற்குள் பிரவேசிப்பதாக தமிழக கியூ காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தமிழகத்திற்குள் பிரவேசித்த 42 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குள் உட்படுத்தப்பட்டு வருவதாகவும் கியூபிரிவு காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளார்கள். (அ-5)

# அச்சுறுத்தல்கள் குறித்து ஊடகவியாளர்கள் மல்வத்த பீடத் தலைவரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் பல்வேறுவிதமான அச்சுறுத்தல்கள் குறித்து அரசியல் வாதிகள் உட்பட பல்வேறு தரப்பினரிடம் முறைப்பாடு செய்துவருகின்ற ஊடக அமைப்புகள், திங்களன்று இலங்கையின் முக்கிய பௌத்த மதபீடங்களில் ஒன்றான மல்வத்தை பீடத்தின் தலைவரைச் சந்தித்துள்ளார்கள்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் ஊடகவியலாளர்கள் அண்மைக்காலமாக எதிர்நோக்குகின்ற கொலை, கடத்தல் மற்றும் தாக்குதல்கள் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்து மல்வத்தை பீடத்தின் தலைவரான திப்பட்டுவேவ சிறிசுமங்கல மஹாநாயக்க தேரரிடம் ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்ததாக இந்த சந்திப்பில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களின் குழுவில் இடம் பெற்ற சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சார்பிலான செய்தியாளர் ஐ. ஏ. ரசாக் தெரிவித்துள்ளார். (அ)

# இராசிபலன்

30.07.2008
(ஆடி15, புதன்கிழமை)
திரயோதசி முன்னிரவு 08.52மணிவரை
திருவாதிரை முன்னிரவு 09.44மணிவரை
இராகுகாலம் 12.03-01.33மணிவரை
சுபநேரம்-04.33-06.03 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, தனலாபம். |
| இடபம் | விவாதம், மாதர் நட்பு, மனச்சோர்வு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, சத்துரு ஜெயம், உடல்நலம், புதியமுயற்சி. |
| கடகம் | காரிய அலைச்சல், ரோகநிலை பேராசை, தனவிரயம். |
| சிங்கம் | பெருமையடைதல், இஷ்டசித்தி, பொருள்சேர்க்கை, சகோதரர் உதவி. |
| கன்னி | நல்ல செய்தி, புதிய திருப்பம், அதிகாரம், தொழில்நன்மை. |
| துலாம் | கட்டுப்படுத்தல், தந்தைவழி உறவு, பிரயாணம், வீண்பயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பணக்குறைவு, மரியாதைக் குறைவு |
| தனுசு | சௌக்கிய விருத்தி, களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய சித்தி. |
| மகரம் | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், போசனசுகம், நோய்குணமடைதல். |
| கும்பம் | கௌரவக்குறைவு, செய்தொழில் விருத்தி, நோய்குணமடைதல். |
| மீனம் | உடல்நலக்குறைவு, மனப்பயம், முயற்சி தாமதம், பணவிரயம். |

வளவன்

# விண்ணப்பம் கோரல்

## விதை தொழில்நுட்பவியலாளர் பதவி

விவசாயத் திணைக்களத்தின் விதை தொழில்நுட்பவியலாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தி 15.08.2008ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக "விவசாயப் பணிப்பாளர் நாயகம், தபால் பெட்டி இல 1, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

## வரவேற்பு அலுவலர் பதவி

தேர்தல் திணைக்களத்தின் மேற்குறித்த பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களைஉரிய முறையில் தயாரித்து 25.08.2008 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோகிடைக்கக்கூடியதாக "தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் திணைக்களம், சரண மாவத்தை, இராஜகிரிய" எனும்முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## விரிவாக்கல் உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில் நுட்பவியல் சேவையில் II "ஆ" வகுப்பு I விரிவாக்கல் உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் 25.08.2008 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 25.07.2008 வர்த்த மானியிலோ அன்றி வலம் புரிக் காரியாலயத்திலோ நேரிலோ பார்வையிடலாம். (ஓ)

# சாந்தனது ஆங்கில எழுத்துக்கள் பண்பாட்டு பரிவர்த்தனைக்கு வழி கோலக்கூடியவை

## துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்



'சாந்தன் ஆங்கிலத்தில் எழுதிய கதைகளும் கவிதைகளும் இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையிலான பண்பாட்டுப் பரிவர்த்தனைக்கு மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் பல்வேறு மொழி பேசும் மக்களுக்கிடையில் ஆங்கிலத்தினூடான பண்பாட்டுப் பரிவர்த்தனைக்கு வழிகோலக் கூடியவை' எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்ப்பாண பல்கலைக் கழக வவுனியா வளாக ஆங்கில மொழித் துறை விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் தொகுத்த 'சாந்தனது எழுத்துலகம்' எனும் நூலின் அறிமுக நிகழ்வு பல்கலைக் கழக புவியியல்துறை மண்டபத்தில் கவிஞரும் ஆங்கில மொழிபெயர்ப்பாளருமாகிய சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு பேராசிரியர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், சாந்தனது அர்ப்பணிப்பே அவரின் முக்கியத்துவத்திற்குக் காரணமாகியது. அவர் எமது வாழ்வின் துன்பங்களோடும் மகிழ்வோடும் தமது அனுபவத்தைப் பிணைத்து வருபவர். அவரது எழுத்துக்கள் எமது கலாசார அடையாளம் மட்டுமல்ல, இனங்களுக்கிடையிலான பண்பாட்டுப் பரிவர்த்தனைக்கும் உலகளாவிய பண்பாட்டுப் பரிவர்த்தனைக்கும் வழிகோலக் கூடியவை! எம் தாய்மொழி எம் கண் போன்றது. பிறமொழிகள் கண்ணாடி போன்றன எனக் குறிப்பிடும் விளம்பரம் போல் ஆங்கில மொழியினூடாக உலகத்தொடர்புக்கு வழி உண்டாகிறது எனக் குறிப்பிட்டார் பேராசிரியர்.

சாந்தனுடன் ஆரம்ப காலங்களில் கொழும்பு கலை இலக்கிய நண்பர்கள் கழகத்தினூடாகப் பழகிய காலங்கள் நினைவுக்கு வருகிறது. இன்று சாந்தன் எழுதிய எழுத்துக்கள் முக்கியத்துவமடைவதற்கு அன்றைய அந்த இலக்கியத் தேடல் காலத்திற்கு முக்கியத்துவம் கிடைக்கிறது. இன்றைய நிகழ்வு ஒரு அரிய சந்தர்ப்பமாகும். இரண்டு நிகழ்வுகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த நூலை உருவாக்கிய கந்தையா ஸ்ரீகணேசன் அக் குவிமையத்தை ஏற்படுத்துகின்றார். ஒன்று சாந்தனை அங்கீகரிப்பது மற்றையது தமிழ் உணர்வு சார்ந்த ஆக்க எழுத்துக்கள் ஆங்கிலத்தில் வருவதனால் ஏற்படும் முக்கியத்துவம். எனவே சாந்தனை மேலும் உற்சாகப்படுத்தும் பணி உண்டாகின்றது. அதேவேளை இந்நூலின் வெளியீடு ஒருவழி கற்கை முறையாகின்றது. சமகாலத்தில் எமது முன்னுரிமைகள் வேறாக இருந்த போதும் இந்த தொகுப்பு எமது கல்வி முறை நெறிசார்ந்ததும் உணர்வு சார்ந்ததும் மெருகுபடுத்தப்பட வேண்டியதை வலியுறுத்துகிறது. சாந்தனை அவரது மார்க்ஸிச கண்ணோட்டம் மனிதநிலைப்படுத்தி சிந்திக்க வைத்திருக்க வேண்டும்.

அவரது அர்ப்பணிப்பு அவரை முக்கியமானவராக ஆக்கியுள்ளது. மக்களது வாழ்வின் துன்பத்திலும் இன்பத்திலும் பங்கெடுத்து அதனை எழுத்தில் வடித்து ஆங்கிலத்தில் தருவதன் மூலம் இந்நாட்டில் உள்ள பிற மொழிப் பண்பாடுகளுக்கு இடையில் மட்டுமல்லாமல் உலகளாவிய ஒரு பண்பாட்டுப் பரிவர்த்தனைக்கும் வழிகோல உதவியுள்ளார் என மேலும் குறிப்பிட்டார் உபவேந்தர்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்து பேசிய கவிஞர் சோ.பத்மநாதன், தொகுப்பாசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனின் தொகுப்பு முயற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். எழுபதுகளில் இருந்து தமிழில் எழுதி சாகித்திய விருதுபெற்ற சாந்தன் தொன்னூறுகளில் ஆங்கிலத்தில் எழுதி முதல் நூலை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து இரு சிறுகதை தொகுப்புக்களையும் ஒரு கவிதைத் தொகுப்பையும் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார்.

தேசிய மட்டத்தில் தனது ஆங்கில எழுத்துக்காக விருதுபெற்ற சாந்தனின் எழுத்துக்கள் தமிழ் மக்களின் துயரங்களை தென்னிலங்கைக்கும் மேற்குலகத்திற்கும் வெளிப்படுத்துகின்றன என்றார். இது இந்திய ஆசிய ஆங்கில இலக்கியம். ஆபிரிக்க ஆங்கில இலக்கியம் போன்று இலங்கைத் தமிழ் சார்ந்த ஆங்கில இலக்கியம் முனைப்புப் பெற வழி சமைக்கிறது ஏ.ஜே.கனகரட்ணா சொல்வது போன்று சாந்தன் ஒரு 'அரிய பறவை' தமிழிலும் ஆங்கிலத்திலும் எமது வாழ்வை எழுதி உலகிற்கு உணர்த்துபவர். அவரது எழுத்துக்கள் பற்றிய பல்வேறு விமர்சனங்களைத் தொகுத்த ஸ்ரீகணேசனின் பணி தமிழ் சார்ந்த ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு பெரும் உந்துதலாக அமையும் எனக் குறிப்பிட்டார். (அ)

## அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ. த (உ/த) 2008 மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் மாணவர்களையும் பெற்றோரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் ஏ. அகிலதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## கணனிவள நிலைய விரிவுரையாளர் நியமனம்

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து கணனி வள நிலைய விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச பாடசாலையில் 2வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்ட ஆங்கில மொழியில் புலமையும் கணனித் தேர்ச்சியுமுடைய பட்டதாரி ஆசிரியர்கள் இப்பதவிக்கான விண்ணப்பப்படிவங்களைக் கல்வி அபிவிருத்திப் பிரிவில் பெற்று எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச வைத்தியசாலை பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## மாவட்ட கண்காணிப்புக்குழு கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத்தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தால் நடாத்தப்பெறும் தரம் 5புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இன்று புதன்கிழமை வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறும் அதே நிலையங்களில் நடைபெற உள்ளது. இதில் அவ்வப் பரீட்சை நிலையங்களுக்குரிய பாடசாலை மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி நாளை வியாழக்கிழமை. சங்கானைக் கோட்டம் வட்டு.இந்துக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கோட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உடுவில் கோட்டம் இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை கோட்டம் மல்லாகம் மகாவித்தியாலத்திலும் நடைபெற உள்ளது.

இம் மதிப்பீட்டுப் பணியில் தரம் 5இல் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தவறாது பங்குபற்ற வேண்டும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## இலங்கை செஞ்சிலுவைக் கிளை நிர்வாக சபைத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கிவரும் கிளைகளின் புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் முடிபுற்றுள்ளன. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் வருமாறு,

**பருத்தித்துறைப் பிரிவு**

தலைவர் :-பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம், உபதலைவர்:- பொ.வேலாயுதபிள்ளை, செயலாளர் :- ம. சுதாகர், பொருளாளர்:- அ.இ.யோசப்

*செயற்குழு உறுப்பினர்கள்*

பி. மல்லிகாதேவி, மா. சுலெக்சனா, து.சக்திவேல், செ.சிவக்கொழுந்து

**உடுவில் பிரிவு**

தலைவர் :- ம.சிறிக்காந்தன், உபதலைவர்:- த. குணரத்தினம், செயலாளர் :- சி.முரளிநாத், பொருளாளர்:- அ.ஜெயாகரன்

*செயற்குழு உறுப்பினர்கள்*

ம. சசிதரன், க.யதீஸ்குமார், நா.பஞ்சலிங்கம், த. வாமதேவன்

**காரைநகர் பிரிவு**

தலைவர்:-சோ.விக்னேஸ்வரன், உபதலைவர் :- தெரிவு செய்யப்படவில்லை, செயலாளர் :- பாலன் அற்புதமலர், பொருளாளர்:- தி. பிரபாகரன்

*செயற்குழு உறுப்பினர்கள்*

பொ. கணேஷ், க. கனகரத்தினம், சி.லோகேஸ்வரி, சா. சரிதா.

**மருதங்கேணிப் பிரிவு**

தலைவர்:- அ. சாள்ஸ் அரியகுமார், உபதலைவர்:- க. ஆனந்தமூர்த்தி, செயலாளர்:- சி. திரவியராசா, பொருளாளர் :- கி. அம்பிக்குமார்.

*செயற்குழு உறுப்பினர்கள்*

ம.பசுவதி, வே.தில்லைநாதன், க.நவரத்தினம், பொ.பொன்னம்பலம். (அ-134)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம், குமாரசாமி வீதியில் அமைந்திருக்கும் வேதாந்த மடத்தில் வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30மணியளவில் மடத்தின் ஏழாவது குரு பீடாதிபதியான ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் இரண்டாவது குருபூசை நடைபெறவுள்ளது. நிகழ்வில் தாவடியூர் ஆர். திருஞானசம்பந்தரின் பண்ணிசையும் தொடர்ந்து விஷேச அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற உள்ளன. (ஓ)

## சைவப்புலவர் தேர்வுகள்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் ஓகஸ்ட் மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது.

தேர்வுகளை முன்னிட்டு வழிகாட்டல் விரிவுரைத்தொடரில் இன்று பிற்பகல் 2 மணிக்கு தமிழ் இலக்கணமும் நாளை பிற்பகல் 2 மணிக்கு சிவஞானபோத விரிவுரை வகுப்புக்களும் நடைபெறும். (அ)

## தமிழ் விழா

உடுவில் மகளிர் கல்லூரி தமிழ் விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொள்வர். (அ)



கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற 'சுவாமி விவேகானந்தர்' கண்காட்சி ஆரம்ப விழாவிலே ஆசிரியை திருமதி ரீ.சத்தியபவானந்தன் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதை யும் சுவாமி சித்ரூபானந்தா அருகில் நிற்பதையும் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (பரு.நிருபர்)

# நோத்முதல் கோபல்லவா வரை 52



### கோல்புறூக் கெமறன் திருத்தத்தின் பின்

கட்சிப் பிரிவுகளும் இனவாரிப் பிரிவுகளும் அக்காலத்தில் இல்லை. அங்கிருந்தவர்கள் உத்தியோகப்பற்றற்ற அங்கத்த வரும் என்ற இருபிரிவினரே உத்தியோகப் பற்றற்றவருள் ஆங்கிலேயர், பறங்கியர், தமிழ ர், சிங்களவர் ஆகிய பலரும் இருந்தார்கள். பலரும் இருந்த பகுதியினர் சிறுபான்மையினராயும் அதிகாரமில்லாதவராயும் இருந்தார்கள். அதிகாரமுள்ள உத்தியோகப் பற்றுள்ளவர் பெரும்பான்மையினராயிருந்தார்கள். இவ்விரு தரத் தாரும் 1847 ஆம் ஆண்டில் முதன் முதலாக மோதிக்கொள்வாராயினர்.

அக்காலத்தில் ஏற்பட்ட கோப்பி பயிரழிவு காரணமாக அரசாங்கம் தெருக்கள் அமைப்பதற்குப் பணம் ஒதுக்குவதைக் குறைத்தது. அப்பொழுதுதான் மலைநாட்டுத் தோட்டப் பகுதிகள் உருப்பெற்றன. அவற்றுக்கு நல்ல வீதிகள் இன்றியமையாதவை எனக் கண்ட உத்தியோகப் பற்றற்றவர் அறுவரும் அரசாங்கத்தின் கொள்கையை அறவே வெறுத்தனர். ஆனால் ஆள்பதி அவர்கள் தமக்குச் சாதகமாக உள்ள உத்தியோக அங்கத்தவரின் ஆதரவால் காரியங்களை நிறைவேற்றி வருவாராயினார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் ஆறுபேரும் தாங்கள் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாயிருந்தபோதிலும் எண்ணிக்கையிற் சிறு பாண்மையினராயிருத்தலால் பெரும்பான்மையினராய உத்தியோக அங்கத்தவரின் தீர்மானங்களை வீழ்த்த இயலவில்லை எனக் கண்டனர். அதனால் அன்று தொடக்கம்.

1. உத்தியோகப் பற்றற்றவர் தொகை உத்தியோக அங்கத்தவரில் பார்க்க அதிக்மாய் இருத்தல் வேண்டும் என்றும்,

2. ஆள்பதி சட்டசபைக்குக் கட்டுப்படுதல் வேண்டும் என்றும்,

3. தமக்கு அதிகாரம் வழங்கப்படல் வேண்டும் என்றும்,

4. அரசாங்கம் செலவுகளைக் குறைத்தல்

**மீள் பார்வை**

வேண்டும் என்றும்,

5. உத்தியோகப்பற்றற்றவர் வரவு செலவுத் திட்டத்தை கண்காணித்தல் வேண்டும் என்றும் கோரிக் கிளர்ச்சி செய்வாராயினர்.

அவர்களுடைய கோரிக்கைகளை அவர்கள் வரைந்தனுப்பிய நினைவேட்டில் படித்த குடியேற்ற மந்திரியார் எழுதிய பதிலில் பல காரியங்களைக் குறிப்பிட்டார். "இப்பொழுதுள்ள நிலைமையில் சட்ட சபையில் தேர்தல் முறை என்பன வாதியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டால் அவற்றைக் கொண்டு நடத்துவதற்கு இலங்கைவாசிகளுக்குப் போதிய தகமை இல்லை. அதனால் இங்குள்ள ஐரோப்பியரே இலங்கையரை நலியச் செய்ய நேரும் ஆதலால் வேறு சில திருத்தங்களைச் செய்யலாம்" என எழுதினார்.

அதன் பயனாகவே முன்னர் இலங்கையில் கட்டளைச் சட்டங்கள் நடைமுறையில் வருவதன்முன், குடியேற்ற மந்திரியாரின் பிரசித்தம் பெற்றிருத்தல் வேண்டும் என்றிருந்த நியதி 1847ஆம் ஆண்டு தொடக்கம் அத்தகைய பிரசித்தங்கள் ஆள்பதியவர்களே செய்யலாம் என மாற்றியமைக்கப்பட்டது. இன்னும் 1848ஆம் ஆண்டு முதலாகச் சட்டசபையினர் வரவு செலவு விபரத்தைக் கண்ணாற் காணலாம் என்றும் அதனை ஆள்பதி மறைவாய் வைத்திருக்க இயலாது என்றும் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இலங்கையர் செய்த கிளர்ச்சியின் பயனாகவே 1889 ஆம் ஆண்டில் வேறுறொரு திருத்தஞ் செய்யப்பட்டது.

அதிலே அரசாங்கம் உபமதிப்பீட்டுப் பணம் பெறுவதனால் சட்டசபையின் அங்கீகாரத்தைப் பெற்றேயாகல் வேண்டும் என்று திருத்தப்பட்டது.


குடியேற்றநாட்டு மந்திரியார் அளித்த சலுகைகளில் வேறொன்று உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகள் சட்டசபையிலே முறிகள் பிரேரிக்க யோக்கியம் உடையவர்கள் என்று கணித்தமை. அதனைத் தொடர்ந்து தோட்ட விளைவு நன்றாக இருந்ததால் செலவுப் பிரச்சினை உண் டாகாதமையால் கிளர்ச்சிகள் மேலும் எழவில்லை. உத்தியோகப் பற்றற்றவர் தொகை அதிகரிக்கப்படல் வேண்டும் என்ற கிளர்ச்சி இரண்டாம் முறையாக 1864 ஆம் ஆண்டில் எழுந்தது. என்றாலும் அதற்கு 25 ஆண்டுகளுக்குப்பின் 1889ஆம் ஆண்டிலேதான் உத்தியோகப் பற்றற்றவர் தொகை இரண்டால் அதிகரிக்குமுகமாகக் கண்டிச் சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியும், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியும் நியமிக்கப்பட்டனர்.

முஸ்லிம் பிரதி நிதியாக முதன் முதலாக நியமிக்கப்பட்டவர் காசிம் அப்துல் றகிமான் அவர்களாவர். அன்னாருக்கு முன் தமிழர் பிரதிநிதியே முஸ்லிம்களுக்குமாகப் பிரதிநிதித்துவம் வகித்தார். சேர் இராமநாதன் கூட 1879ஆம் ஆண்டு முதலாக 1889ஆம் ஆண்டீறாகத் தமிழருக்கும் முஸ்லீம்களுக்குமாகவே பிரதிநிதியாயிருந்தார்.

**க.சி.குலரத்தினம்**

முன்னர் 16மாவட்டப் பிரிவுகளாய் இருந்த இலங்கையை கோல்புறூக் திருத்த சபையினர் 5 மாகாணங்களாகப் பிரித்தனர். அதனால் பரிபாலனச் செலவு குறையும் என அவர்கள் கருதினார்கள். உண்மைதான். ஆனால் இப்போது ஒவ்வொரு மாகாணமும் முந்திய மாவட்டப் பிரிவிலும் பார்க்க மூன்று பங்கு பெரிய நிலப்பரப்பாக இருந்தது. அதனால் மேலுத்தியோகத்தர் நாட்டுப் புறங்களை நேரில் சென்று அறிந்துகொள்ளுதல் இயலாதிருந்தது. எனவே பெரும் பகுதிகள் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டதால் அந்நிலப் பரப்பில் வாழ்ந்தவரின் தேவைகள் நிறைவுபெற வழியில்லாது போயின. அன்றி முன்னர் மெயிற் லண் ஆள்பதியின் காலத்தில் நிலவிய சிவில் சேவை முறையினைக் கோல் புறூக் கொடுத்து விட்டார் என்றே பலருங் கருதுவாராயினர். (தொடரும்)







அண்மையில் இடம்பெற்ற காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் பூரண கும்பங்கள் அடியார்கள் புடைசூழ சிவாச்சாரியார்களால் எடுத்துவரப்படுவதையும் வசந்தமண்டப கலசங்களுக்கான கும்பாபிஷேகம் நடைபெறுவதையும் வசந்தமண்டபத்தில் பூரணை புட்கலை சமேத ஐயனார் அலங்கரிக்கப்பட்டிருக்கும் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# 19 ஆம் நூற்றாண்டு 4

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்



### பத்திரிகைகள்

சின்னக்கதைகள், ஐயவினாக்கள், கவிதைகள்(செய்யுள்கள்)கடிதங்கள்,புதினச் சங்கதிகள் விளம்பரங்கள் (பிரசித்த பத்திரிகை) நூல் விபரங்கள், மதிப்புரைகள், மரணசங்கதிகள் எனப் பல்வகையான விடயங்களை தாங்கி உதயதாரகை வெளிவந்தது. ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை இதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றதும் தமிழ் இலக்கிய இலக்கண விடயங்களுக்கு மேலும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஆறுமுகநாவலர் பல கடிதங்களையும் கண்டனங்களையும் உதயதாரகை பத்திரிகையிலே கந்தர் ஆறுமுகவன் என்ற பெயரில் எழுதியுள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் பத்திரிகைத்துறையிலே ஈடுபட்டு உயர ஊற்றுக்காலான பெருமை உதயதாரகைக்கு உண்டு.

உதயதாரகையைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் வெளிவந்தன. சைமன் காசிச் செட்டியின் உதயாதித்தன் (1841) உவைமன் கதிரைவேற்பிள்ளையின் வித்தியாதர்ப்பணம் அல்லது Literary Mirror (1853) வில்லியம் சின்னத்தம்பியின் பாலியல் நேசன் (1859) இலங்கை நேசன் (1875) சத்தியவேத பாதுகாவலன் (1876) சரவண முத்துப்பிள்ளையின் சைவ உதயபானு (1880) விஞ்ஞான வர்த்தனி (1882) முஸ்லிம்நேசன் அல்லது Muslim friend (1882)

இந்து சாதனம் அல்லது Hindu organ (1889) வைத்தியவிசாரணி (1898) சைவாபிமானி, சன்மார்க்க போதினி முதலான பல பத்திரிகைகள் 19 நூற்றாண்டிலே தோன்றி இயங்கின. ஏறத்தாழ இருபத்தைந்து பத்திரிகைகள் 19 நூற்றாண்டிலே தொடங்கி நடாத்தப்பட்டன என்று அறிய முடிகின்றது.

மேலே சுட்டிய பத்திரிகைகளின் (பத்திராதிபர்களின்) கல்விப்புலமை, பண்பாட்டுப் பின்னணி முதலியவற்றை ஆராய்பவர்களுக்கு 19 ஆம்நூற்றாண்டின் இலக்கியச் செல்நெறியின் போக்கும் நோக்கும் இலகுவிலே புலனாகும். இனத்தின், மதத்தின், மொழியின் இலக்கியத்தின் பண்பாட்டின் தனித்துவத்தைப் பேணும் இயல்வு இக்காலப் பகுதியிலே முன்னெப்போதுமில்லாத அளவுக்கு மேற் கிளம்பியதன் வெளிப்பாடாகவே இப்பத்திரிகைகளின் தோற்றத்தைக் கருதவேண்டும்.

முதன் முதலாக ஈழத்திலே தமிழ் புலவர் வரலாற்றை எழுதியவர் எனக் கருதப்படும் சைமன் காசிச்செட்டி, தமிழ் அகராதியைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நீதிபதி உவைமன கதிரைவேற்பிள்ளை, சைவ சமயப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுழைத்த நாவலரின் ஞானபரம்பரையெனப் போற்றப்பட்ட சரவணமுத்துப்பிள்ளை, கலைக்களஞ்சியத்தின் முன்னோடி எனக்கருதப்படும் அபிதான சிந்தாமணி ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்தின் முதல் தமிழ் நாவலாசிரியரான சித்திலெப்பை, நூலாசிரியரும் உரையசிரியரும் பதிப்பாசிரிருமாகத்திகழ்ந்த வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வையித்தியலிங்கம் பிள்ளைபதிப்பாளரும் புலவரும் நாடகாசிரியருமான அச்சுவேலி தம்பிமுத்துப் பிள்ளை முதலானோர் ஏதோ ஒரு வகையிலே பத்தொன்பதாம்நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறியின் வலுவைப் பிரதிபலிப்பவர்ளாகவே காணப்படுகின்றனர்.

இவர்களின் பணிகளில் சமூகப்பிரக்ஞையும் இழையோடியிருப்பதை இப்பத்திரிகைகள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. இவர்களிற் பலர்ஆங்கிலம் தமிழும் விரவி வரப் பத்திரிகைகளை வெளியிட்டமை அக்கால மத்தியதரவர்க்கத்தின் தேவையையொட்டியே எனலாம். அத்தோடு சுதேசிகளுக்கன்றி விதேசிகளுக்கும் பயன்படும் வகையிலேயும் இரு மொழி விரவல் நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதலாம். ஐசாக் தம்பையாவின் சிலோன்றி வியூ (1983) பீரியட் (1895) ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகள் பெருமளவுக்கு இலங்கையில் இருந்த துரைத்தனத்தாரை மனங்கொண்டே வெளி வந்தன என்று கூறப்படுகின்றது.

பொதுவாக இக்காலப் பகுதியிலே தோன்றிய பத்திரிகைகள் பன்முகப்பயன்பாட்டைக் கொண்டிருந்தன. தமிழ் மொழி, இலக்கியத்தின் குணாம்சங்களை முன்னெடுத்துச் செல்லும் மிகச் சிறந்த சாதனமாக இப்பத்திரிகைகள் விளங்கின . தமிழ் மொழிப்பயன்பாட்டின் நெகிழ்ச்சித் தன்மைக்கு வழிசமைத் சாதனமாகவும் பத்திரிகைகளைக் குறிப்பிடலாம்.19 ஆம் நூற்றாண்டில் ஈழ நாட்டிலே நிலவிய பல்வேறு விதமான உரைநடையின் "கதி" யைக் கண்டு கொள்ளவும் இப்பத்திரிகைகள் பெரிதும் உதவுகின்றன.

பதிப்பு முயற்சிகள் அச்சியந்திர பயன்பாட்டின இன்னொரு பரிமாணமாக 19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பதிப்பு முயற்சிகளை குறிப்பிடலாம். ஓலைச்சுவடிகளாக பயன்பட்டு வந்த நூல்கள் "அச்சுப்புத்தக ரூபத்தில்" பல பிரதிகள் தோன்றுவதற்கு அச்சியந்திர வசதி பயன்பட்டமையை முன்னரே குறிப்பிட்டோம்.

19ஆம் நூற்றாண்டிலே ஈழ நாட்டு மிகச் சிறந்த பதிப்பாசிரியர்கள் தோன்றினர். அச்சுப் பொறியைப்பயன்படுத்தி பண்டைத்தமிழ் நூல்களை அழிந்தொழிந்து போகவிடாது

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

பேண வேண்டும் என்ற உந்துதல் இக்கால தமிழர்கள் அறிஞர்கள் மத்தியிலே காணப்பட்டது. பதிப்புப்பணியிலே தமிழகத்திற்கு வழி காட்டியாகவும் ஈழநாடு அமைந்தது என்பர்.

(தொடரும்)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 11

பகுதி -I

நேரம் - 45 நிமிடம்

வலம்புரி ஆசிரியர் குழு

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**☼ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் பொதுவான ஒரு தொடர்பைக் கொண்ட எண் கோலத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

(01) 1) 2,3,6,12,5,7
2) 5,25,10,15,60
3) 1,3,5,7,9,11
4) 100, 80,50,90,10

(02) 1) 2,4,6,20,12,30
2) 10,40,20,50,30
3) 25,100,50,150,75
4) 1,4,9,16,25,36

**☼ கீழுள்ள ஒவ்வொரு வினாவிலும் வெற்றுக் கூண்டுகளுக்குள் வர வேண்டிய பொருத்தமான எண்களை எழுதுக.**

(03) ☐ X ☐ X ☐ = 30

(04) ☐ + ☐ - 20 = 0


**☼ கீழேயுள்ள கூண்டினுள் காணப்படும் பொருட்களை மூன்று வகைகளாக வேறு படுத்தி அவற்றுக்குரிய இலக்கங்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**



(05)............................................(06)..............................(07)...................................

**☼ கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதல் உருவில் காட்டப்பட்டிருப்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உருவைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**


(08)



(09)



(10)




**☼ கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் கூற்று பிழையாவதற்கான காரணம் என்ன என்பதைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

(11) "மின்வெட்டும் போது ஏற்பட்ட பெரிய சத்தத்தைத் தொடர்ந்து சில வினாடிகளின் பின் பிரகாசமான ஒளி ஒன்று தென்பட்டது"
1.மின்வெட்டும் போது ஒளி ஒன்று தென்படாததனால்
2.மின்வெட்டும் போது சத்தத்தையும் ஒளியையும் ஒரே நேரத்தில் கேட்கவும் பார்க்கவும் முடியுமானதால்
3.மின்வெட்டும் போது வெளிச்சம் வெளிப்பட்டதன் பின்பு சத்தத்தைக் கேட்க முடியுமானதால்

(12) வானத்தில் பகல் பன்னிரண்டு மணியளவில் பறக்கும் வௌவால்களைக் கண்ட தம்பி மகிழ்ச்சியினால் சத்தமிட்டான்.
1.பகல் நேரத்தில் வௌவால்கள் வானத்தில் பறக்கமாட்டாது.
2.வௌவால்களுக்குப் பறக்க முடியாமையினால்
3.வௌவால்கள் வெள்ளை நிறமாதலால் பகல் நேரத்தில் அவை தெரியாது போவதனால்

(13) "இரவு எட்டுமணியளவில் வானத்தில் பல்வேறு நிறங்களில் தோன்றிய வானவில் மிக அழகாகக் காட்சியளித்தது"
1.வானவில்லில் ஒரு நிறம் மாத்திரம் இருப்பதனால்
2.வானவில் தோன்றுவது பகல் நேரங்களில் என்பதனால்
3.வானவில் தோன்றுவது போயா தினங்களில் மாத்திரமாதலால்


**☼ கீழே கூண்டினுள் தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்திக் கருத்துள்ள ஒரு வாக்கியம் அமைத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(14) ஈக்களினால்
அசுத்தம்
உணவு
அடைகின்றது ..................................................

(15) வேகமாகச்
விபத்துகள்
வாகனங்களை
ஏற்படுகின்றன
செலுத்துவதால் ..................................................

(16) வழங்கப்படல் வேண்டும்
சகல
தடுப்பூசி
குழந்தைகளுக்கும் போலியே ..................................................

**☼ கீழே காணப்படும் உருவின்படி கேட்கப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**




(17) பரீட்சையில் சித்தியடையாத ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1. 4  2. 7  3. 11  4. 2

(18) உருவின்படி மொத்தப் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1. 2  2. 4  3. 7  4. 13

(19) உருவின்படி பிள்ளைகளின் மொத்தம் எண்ணிக்கை யாது?
1. 15  2. 13  3.14  4.16

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ளவை ஒரு காரியத்திற்கான காரணம் எனின் "\/" அடையாளத்தையும் காரணமல்ல எனின் X அடையாளத்தையும் எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் இடுக.**

(20) நான் பரீட்டைசயில் சிறந்த முறையில் சித்தியடைந்ததனால் அம்மா எனக்குப் பரிசு ஒன்று வாங்கித்தந்தார். (  )

(21) அப்பா பையொன்றை எடுத்துக் கொண்டு நகரத்திற்குச் சென்றார் (  )

(22) காற்று வேகமாக வீசியதனால் மரம் விழுந்தது (  )

**☼ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

(23) மனதால் உணர முடியாததொன்று
1.மகிழ்ச்சி  2.துக்கம்  3.குளிர்  4.பயம்

(24) கண்ணுக்குத் தெரியாததொன்று
1.வெளிச்சம்  2.நிறம்  3.இருள்  4.வெப்பம்

(25) தோலால் உணர முடியாததொன்று
1.மணம்  2.குளிர்  3.வெப்பம்  4.காந்துதல்

**☼ இலக்கம் 26,27 ஆம் வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய பொருத்தமான வினாவைத் தெரிவு செய்க.**

(26) "அக்கா பெருந்தொகையான பணத்தைப் புத்தகங்களுக்காகச் செலவிட்டார்"
1.அக்கா புத்தகங்களுக்கும் பணம் செலவிட்டாரா?
2.அக்கா புத்தகங்களுக்கு அதிக தொகைப் பணத்தைச் செலவிட்டாரா?
3.அக்கா எவற்றுக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டார்?

(27) "நாளை காலை 10.00 மணிக்கு விழா நிகழ்ச்சிகள் நடைபெறும்"
1. நாளை காலை நடைபெறுவது விழாவா?
2.நாளை காலை எத்தனை மணிக்கு விழா நடைபெறும்?
3.நாளை காலை விழா நடைபெறுவது ஏன்?

**☼ கீழேயுள்ள விபரங்களை வாசித்து, அது தொடர்பாகத் தந்துள்ள கருத்துச் சரியானதா? பிழையானதா? அல்லது கூறமுடியாததா? என்பதைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

தங்கையும் அண்ணனும் நானும் கல்வி கற்பது அம்மா கற்பிக்கும் பாடசாலையிலாகும். நாங்கள் எல்லோரும் வீட்டில் இருந்து பாடசாலைக்கு நடந்து செல்ல ஐந்து நிமிடமளவு நேரம் எடுக்கும் . ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு நான் இந்த வருடம் தோற்ற உள்ளேன். அதனால் கணிதம், சுற்றாடல், தமிழ்மொழி, சமயம் எனும் சகல பாடங்களையும் அம்மா எனக்கு வீட்டில் கற்பிப்பார். எனது அப்பா வெளிநாட்டில் தொழில் புரிகின்றார். அப்பா, வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பரிசுப் பொதி ஒன்று நேற்று எங்கள் வீட்டுக்குத் தபாலில் கிடைத்தது.

(28) அம்மா பாடசாலையில் தரம் ஐந்திற்கு கற்பிக்கின்றார்.
1.சரியானது  2.பிழையானது  3. கூறமுடியாது


(29) நேற்று ஞாயிற்றுக்கிழமையாகும்.
1.சரியானது  2.பிழையானது  3.கூறமுடியாது

(30) வீட்டுக்கு மிக அண்மையில் பாடசாலை அமைந்துள்ளது.
1.சரியானது  2.பிழையானது  3.கூறமுடியது

(31) அம்மா கற்பிக்கும் பாடசாலை ஆண், பெண் எனும் இருபாலாரும் கற்கும் ஒரு கலவன் பாடசாலையாகும்.
1.சரியானது  2.பிழையானது  3.கூறமுடியாது


**☼ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவுக்கும் உரியவிடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(32)





இவ்வுருவில் காணப்படுவது ஒரு கம்பி வளையமாகும் அதில் A,B க்கு இடையேயான தூரம் 4cm. எறும்பொன்று P யிலிருந்து M ஊடாக Q இற்குச் சென்றதெனின் எறும்பு சென்ற முழுத்தூரமும் யாது?..........

(33)



இவ்வுருவில் காணப்படுவது ஒரு கடதாசித் துண்டை நன்றாகமடித்து துளையிட்டு விரித்த பின் தோன்றும் வடிவமாகும். இவ்வடிவத்தைப் பெற கடதாசியை நான்காக மடித்து எத்தனை முறைகள் துளையிட வேண்டும்?..............


(34)




உருவில் காணப்படுவது போன்று தராசுத்தட்டு B யில் ஒரேயளவு நிறையுடைய மூன்று செங்கற்கள் உள்ளன. அதன்படி செங்கல் லின் நிறை எவ்வளவாகும்.?..........................

(35) மாம்பழத்தை விட அப்பின் பழமொன்றின் விலை இரண்டு மடங்கானது. இரண்டு பழங்களினதும் விலை ரூபாய் 30. 00 எனின் ஒரு மாம்பழத்தின் விலையாது?..................

(36)




இக்காட்போட் துண்டின் மூலம் வெட்டியெடுக்க கூடிய 5cm நீளம் 2cm அகலமுள்ள செவ்வக வடிவங்களின் எண்ணிக்கை யாது?

(37) ஒரு வீட்டில் 5cm உள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை 20 ஆகும். அவ்வீட்டில் இருப்பது கோழியும் மாடும் மாத்திரமாகும். அந்த வீட்டில் உள்ள மாட்டுக் கால்களின் மொத்த எண்ணிக்கை 40 எனின் அந்த வீட்டில் உள்ள கோழிகள் எத்தனை?,........................

**☼ இலக்கம் 38 ,39 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொல்லினால் விபரிக்கப்படும் மிகச் சரியான கூற்றைக் கீழுள்ளவற்றிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

(38) "பாடசாலை "எனப்படுவது,
1.கற்றுக்கொள்ளும் ஓர் இடமாகும்.
2.கல்விச் சேவைகள் நடைபெறும் ஓர் இடமாகும்.
3.கற்பிக்கப்படும் ஓர் இடமாகும்.

39) "நூதனசாலை" எனப்படுவது,
1.புராதன பொருட்களைச் சேமித்துப் பாதுகாக்கும் ஓர் இடமாகும்
2.புராதன புத்தகங்களைச்சேமித்துப் பாதுகாக்கும் ஓர் இடமாகும்
3.புராதன பொருட்களை உற்பத்தி செய்யும் ஓர் இடமாகும்.

**☼ கீழே காணப்படும் பாடலின்படி, பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

**"கொக்கரக்கோ" என்று சேவல் கூவி விட்டது**
**குயிலுங் கூட "குக்கூ" என்று பாடி விட்டது**
**திக்கனைத்தும் இருள் விலகி ஓடி விட்டது**
**செங்கதிரும் வானில் மெல்ல ஏறி விட்டது.**

(40) அ.இப்பாடல் பகுதியில் குறிப்பிடப்படும் நேரம் யாது?
1.காலை  2. பகல்  3. மாலை  4. இரவு

ஆ.) "செங்கதிர்" என்பதைப் பிரித்து எழுதினால்
1.செங்+கதிர்  2.செழுமை+ கதிர்  3.செங்+அதிர்  4.செம்மை+கதிர்

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

பௌதிகவியல் - I
Physics - I

2 மணித்தியாலங்கள்
2 Hours


முக்கியம்:- • இவ்வினாத்தாள் 12 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
• எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
• 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து அதனை விடைத்தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிப்பக்க.

$(g=10\ N\ kg^{-1})$

01) $Y=A\ Sin(\omega t+\theta)$ என்னும் சமன்பாட்டில் Y, A, ω, t என்பன முறையே இடப் பெயர்ச்சி, வீச்சம், கோணவேகம், நேரம் என்பனவாகும். எனின் θ வின் பரிமாணங்களுக்கு ஒத்த பரிமாணங்களை உடையது.
1) நேரம் 2) இடப்பெயர்ச்சி 3) வேகம்
4) ஆர்முடுகல் 5) பரிமாணங்களற்றது


02) மின்காந்த அலைகளைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A) வெற்றிடத்தில் மின்காந்த அலையின் வேகமானது அதிர்வெண்ணிலும் அலை நீளத்திலும் தங்கியிருக்கும்.
B) வெற்றிடத்தில் இருந்து வேறு ஊடகத்தில் மின்காந்த அலையானது செல்லும் போது அதன் வேகம் குறைவடையும்
C) மின்புலத்தினாலோ காந்தப்புலத்தினாலோ மின்காந்த அலை விலகலுறாது
இக்கூற்றுக்களில் சரியானது.
1) A மாத்திரம் உண்மையானது 2) A யும் B யும் மாத்திரம் உண்மையானவை
3) A யும் C யும் மாத்திரம் உண்மையானவை
4) B யும் C யும் மாத்திரம் உண்மையானவை
5) A,B,C எல்லாம் உண்மையானவை

03) ஏகபரிமாண இயக்கம் பின்வரும் இடப்பெயர்ச்சி (S)-நேர (t) வரைபுகளில் எவை இயக்கத்திசையில் (+) ஆர்முடுகலை கொண்டிருக்கும்.





1) A யும் C யும் மாத்திரம் 2) A யும் D யும் மாத்திரம் 3) A,B,C மாத்திரம்
4) B,C,D மாத்திரம் 5) ABCD ஆகிய எல்லாம்

04) படத்தில் காட்டியவாறு $2ms^{-1}$ என்னும் மாறாக் கதியுடன் இயங்கும் பட்டியில் 50 kg திணிவுடைய பொருள் ஒன்று விழுகின்றது. அப்பொருளானது பின்னதைக்கவில்லை ஆயின் பொருள் விழுந்து 0.5 செக்கன்களின் பின்னர் பட்டியின் கதியை பொருள் அடைந்த தாயின் இக்காலத்தில் பொருளின் மீது தாக்கும் கிடை விசை





1) 200N 2) 100N 3) 50N 4) 40N 5) 20N


05) எளிமை இசை இயக்கமொன்றில் அலையும் பொருள் ஒன்றின் வேக (v) இடப் பெயர்ச்சி (s) வரைபை தருவது





06) $F_1, F_2, F_3, F_4, F_5$ என்னும் ஒரு தள விசைகள் படத்தில்காட்டிய வாறு ஒரு புள்ளிப் பொருள் X இன் மீது பருமனிலும் திசையிலும் தாக்குகின்றது. எனில் விளையுளின் திசை,
1) X இல் இருந்து A நோக்கி 2) X இல் இருந்து B நோக்கி
3) X இல் இருந்து C நோக்கி 4) X இல் இருந்து D நோக்கி
5) X இல் இருந்து E நோக்கி





07) ஒரு சேக்கஸ் வீரன் ஒருவன் படத்தில் காட்டியவாறு தனது கால் பாதத்தின் மூலம் பாத்திரங்கள் சில வற்றை தாங்குகின்றான். இந்நிகழ்வு காரணமாக அவ்வீரனின் புவியீர்ப்பு மையம் இருக்கக்கூடிய புள்ளி.
1) A
2) B
3) C
4) D
5) E




08)




நெருக்கத்தக்கவற்ற பிசுக்குமையற்ற பாயி அருவிக் கோட்டு இயக்கத்தில் இயங்கும் பாயி ஒன்று படத்தில் காட்டியவாறு பாய்கின்றது. குழாயினூடு அமுக்கம்மாறு படுவதை காட்டும் வரைபு,





09) மீற்றர் கோல், வேணியர் இடுக்கிமானி, நுண்மானித்திருகுக்கணிச்சி, கோளமானி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தி அளவிடமுடியாத அளவீடு.
1) நுணுக்குக்காட்டி வழுக்கித்தட்டின் தடிப்பு 2) கம்பி ஒன்றின் விட்டம்
3) சிறிய குழாய் ஒன்றின் ஆழம் 4) கோல் ஒன்றின் நீளம்
5) கோளம் ஒன்றின் ஆரை

10) இரு சம்பக்க அரியமொன்றில் பின்வரும் கதிர்வரிப்படத்தில் பிழையானது, (அரியப் பதார்த்தத்தின் முறிவுச் சுட்டி = 1.5).





11) முன் சில்லு இயந்திரத்திற்கு தொடுக்கப்பட்ட கார் ஒன்றில் Front weel drive vehicle) A,B இல் தாக்கும் உராய்வு விசைகள் முறையே.





12) மீ கடத்திகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று.
1) அவற்றில் உள்ள ஒட்டக்காவிகள் சோடி இலத்திரன்களாகும்.
2) காந்தப் புலத்தினால் அவை தள்ளப்படும்.
3) மின் தடை மிகவும் சிறிது என்பதால் அதிக காலத்திற்கு மீ கடத்தியில் மின்னோட்டம் சேமிக்கப்பட்டிருக்கும்.
4) மிகத் தாழ் வெப்பநிலையிலேயே பதார்த்தங்கள் மீ கடத்தும் இயல்பைக் காட்டும்.
5) சிறந்த மின் கடத்திகள் எப்போதும் சிறந்த மீ கடத்திகளாக இருக்கும்.

13) அருகிலுள்ள சுற்றில் மின் குமிழானது காட்டப்பட்ட பெறுமானத்தில் செயற்படுகின்றது. எனில் தடை R இன் பெறுமானம்
1) 1Ω 2) 2Ω 3) 3Ω 4) 4Ω 5) Ω




14) ABC ஆகியன 4kg, 6kg 10kg திணிவுகளையுடைய மூன்று குற்றிகளாகும். ஒவ்வொரு குற்றிக்கும் இடையிலான நிலையில் உராய்வுக்குணகம் 0.2ஆகும். இவை ஒப்பமான கிடை மேசை மீது படத்தில் காட்டியவாறு ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்பட்டு 12N என்னும் கிடைவிசை A யில் பிரயோகிக்கப்படும் போது ஒவ்வொரு குற்றியினதும் ஆர்முடுகல்.





| | A | B | C |
|---|---|---|---|
| 1) | $3ms^{-2}$ | $1.2ms^{-2}$ | $0.6ms^{-2}$ |
| 2) | $1ms^{-2}$ | $0.5ms^{-2}$ | $0.5ms^{-2}$ |
| 3) | $0.6ms^{-2}$ | $0.6ms^{-2}$ | $0.6ms^{-2}$ |
| 4) | $2ms^{-2}$ | $4ms^{-2}$ | $6ms^{-2}$ |
| 5) | $1ms^{-2}$ | $0.5\ ms^{-2}$ | $2ms^{-2}$ |

15) X,Y என்னும் இரு செய்மதிகள் சமதிணிவுகளை உடையன. இவை புவி மேற்பரப்பிலிருந்து r, 2r அரைகளில் பூமியை சுற்றி வலம் வருகின்றன.

$\frac{\text{Y யில் தாக்கும் மையநாட்டவிசை}}{\text{X இல் தாக்கும் மையநாட்டவிசை}}$ இன் விகிதம்

1) 1/8 2) 1/4 3) 1/2
4) $\sqrt{\frac{1}{2}}$ 5) 1




16) ஒலி அலைகளை உருவாக்கும் முதல் ஒன்றைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A) அதிர் வெண்ணுடன் அதன் சுருதி அதிகரிக்கும்
B) ஒலியின் பண்பு அதன் மேற்றோனிகளில் தங்கியிருக்கும்
C) ஒலியின் உரப்பு அதன் செறிவுக்கு நேர்விகித சமனாகும்.

இக்கூற்றுக்களில் சரியானது/சரியானவை.
1) A மாத்திரம் உண்மையானது 2) B மாத்திரம் உண்மையானது
2) A யும் B யும் மாத்திரம் உண்மையானவை 4) B யும் C யும் மாத்திரம் உண்மையானவை.

17) கட்புலனாகு திருசியப்பட்டை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A) சிவப்பின் அலைநீளம் நீலத்தின் அலைநீளத்திலும் பெரியது.
B) நீல நிறத்திற்கான போட்டோன் சக்தியானது சிவப்பிலும் அதிகமாகும்
C) குறித்த ஊடகம் ஒன்றில் நீல நிறத்திற்கான விலகற்கோணம் சிவப்பின் விலகற்கோணத்திலும் அதிகமாகும். இக்கூற்றுக்களில் சரியானது/சரியானவை.
1) C மாத்திரம் 2) B யும் C யும் மாத்திரம் 3) A யும் B யும் மாத்திரம்
4) A யும் C யும் மாத்திரம் 5) எல்லாம்


18) ஒரு புள்ளியிலுள்ள ஒலிச் செறிவானது முதலில் இருந்து இப்புள்ளிக்கான தூரத்தின் வர்க்கத்திற்கு நேர்மாறு விகித சமனாகும் முதலில் இருந்து 10m தூரத்திலுள்ள புள்ளியில் ஒலிச் செறிவு மட்டம் 50 dB ஆயின் 100m தூரத்தில் ஒலிச் செறிவு மட்டம்
1) 30dB 2) 40dB 3) 50dB 4) 60dB 5) 70dB

19) வளியில் ஒலியின் வேகமானது
A) வெப்ப நிலை அதிகரிப்புடன் குறையும்
B) வளியமுக்கம் திடீரெனக் குறையும் போது வேகம் குறைவடையும்
C) வளியின் சார்ஈரப்பதன் அதிகரிப்புடன் அதிகரிக்கும்
இக்கூற்றுக்களில் சரியானது/சரியானவை.
1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) B யும் C யும் மாத்திரம்
4) A யும் C யும் மாத்திரம் 5) A,B,C எல்லாம்

20) இயல்பான செப்பம் செய்கையிலுள்ள கூட்டுநுணுக்குக்காட்டியில் 2.4cm குவியத் தூரமுடைய பொருளியினால் உருவாக்கப்படும் பொருள் ஒன்றின் விம்பமானது அதிலிருந்து 12cm இல் உருவாகின்றது. பார்வைத் துண்டின் ஏகபரிமாண உருப் பெருக்கம் 5ஆகும் ஆயின் நுணுக்குக்காட்டியில் கோண உருப்பெருக்கம்.
1) 20 2) 16 3) 12 4) 6 5) 4

21) சீரான கம்பியினால் உருவாக்கப்பட்ட அரைவட்ட பகுதிகளின் அமைப்பு ஒன்று படம் காட்டுகின்றது. வளைந்த பகுதிகளின் அலகு நீளத்திற்கான தடை சமனாகும். நேரான கம்பிகளின் தடை புறக்கணிக்கத்தக்கது. படத்தில் காட்டியவாறு 7A மின்னோட்டம் பாய்ந்தால் மையம் O வில் விளையுள் காந்தப்பாய அடர்த்தி.

1) $\frac{5\mu_0 I}{8r}$ 2) $\frac{13\mu_0 I}{16r}$ 3) $\frac{8\mu_0 I}{2r}$
4) $\frac{8\mu_0 I}{13\ r}$ 5) 0




(தொடரும்)

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து துணைத்தூதரகம் முன்பு இன்று ஆர்ப்பாட்டம்

## அனைத்துக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு

(வேதாரண்யம்)

இந்தியமீனவர்களை தொடர்ந்து தாக்குவதை நிறுத்தாவிட்டால் இலங்கை தூதரகத்தை செயற்பட விடமாட்டோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா. பாண்டியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வேதாரண்யத்தில் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் செல்வராஜ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா.பாண்டியன் பேசியதாவது,

இலங்கை கடற்படையினர் இது வரை 400 மீனவர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்களுடைய பெயர் விபரங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விரைவில் வெளியிடும் .ஆனால் 327 மீனவர்கள் இது வரை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று இந்திய அரசு கூறுகிறது.

கொல்லப்பட்ட மீனவர்களின் உண்மையான எண்ணிக்கையை சொல்ல ஏன் அரசு மறுக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அரசில் கொள்கை முடிவுகளை எடுக்கும் முக்கிய பொறுப்பில் உள்ள தி. மு. க. மற்றும் பா. ம.க. போன்ற கட்சி கள் மீனவர்களைத் தாக்கும் இலங்கை அரசிடம் மீன வர்களைத் தாக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் மத்திய அரசிலிருந்து விலகி விடுவோம் என்று குறைந்த பட்ச எச்சரிக்கையையாவது விடுக்கவேண்டும் இதை சொல்லதி.மு.க. ஏன் தயங்குகிறது. என்று தெரியவில்லை.

### தாக்குதல் நிறுத்தப்படா விட்டால் தூதரகத்தை செயற்பட விடமாட்டோம் என எச்சரிக்கை

மீனவர்களை தொடர்ந்து தாக்கும் இலங்கைக்கு ஆயுதங்கள் அனுப்புவதை இந்திய அரசு நிறுத்த வேண்டும் அல்லது மீனவர்களை தாக்குவதை நிறுத்தாவிட்டால் ஆயுதங்களை அனுப்பமாட்டோம் என்று எச்சரிக்கை செய்ய வேண்டும் இதை செய்யவும் மறுக்கிது.

### இலங்கை துணைத் தூதரகம் முன்பு இன்று ஆர்ப்பாட்டம்

இலங்கைக்கு சார்க் மாநாட்டிற்கு செல்லும் பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்பிற்காக இலங்கைக்கு இந்திய அரசு 5 ஆயிரம் படைவீரர்களை அனுப்பியது. இதை அங்குள்ள பாராளுமன்றத்தில் இலங்கையை இந்தியா பிடித்து விட்டது என்று ஒரு எம்.பி. கூறியிருக்கிறார். இதையடுத்து இந்திய அரசு ஆயிரம் வீரர்களை திரும்ப பெற்றுக்கொண்டது. இது 110 கோடி மக்களுக்கும் பெருத்த அவமானம். பிரதமருக்கு பாதுகாப்புக்கொடுக்க வேண்டியதுதான் ஆனால் நமது மீனவர்களுக்கு குறைந்த பட்சம் 5 வீரரையாவது அனுப்பவேண்டாமா? இலங்கை இராணுவத்தினர் தமிழக மீனவர்களை சுட்டுப்படு கொலை செய்ததைக் கண்டித்து இன்று சென்னையில் இலங்கைத் துணைத் தூதரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இதற்கு அனைத்து கட்சிகளும் மீனவர்களும் ஆதரவு தரவேண்டும். இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து மீனவர்களை தாக்குவதை நிறுத்தாவிட்டால் இலங்கை தூதரகத்தை செயல்பட விடமாட்டோம். (அ)

# பதவி விலகுமாறு கட்சித் தலைமை கோரவில்லை - கே.என் சொக்ஸி

(கொழும்பு)

தம்மைப் பதவி விலகுமாறு எவரும் கோரிக்கை விடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்காவைப் பாராளுமன்றத்திற்கு அழைப்பதற்காகத் தமது பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கட்சித் தலைமை குறிப்பிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ இவ்வாறான தொரு கோரிக்கை விடுக்கப் பட வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு கட்சித் தலைமை அழுத்தம் கொடுத்து வருவதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ - 5)

# புத்தளவில் பதுங்கியிருக்கும் புலிகளுக்கு சிங்களக் குடும்பங்கள் ஆதரவு?

## பொலிஸார் விசாரணை

புத்தளவில் பதுங்கியிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு உணவுப் பொருட்கள் எவ்வாறு கிடைக்கின்றன என்பது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நீல் தலுவத்த தெரிவித்துள்ளார்.

புத்தள வனாந்திரப் பகுதியில் பதுங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு யார் உணவு விநியோகம் செய்கின்றனர். என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தள பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று ஏழைக் குடும்பங்கள் திடீரெனச் செல்வந்தர்களாக மாறியுள்ளமை சந்தேகத்தை ஏற் படுத்தியுள்ளதாகப்பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கும் சிங்களக் குடும்பங்கள் பற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ -5)

# சோற்றுப் பார்சலில் இறந்த தவளை ஹோட்டல் உரிமையாளருக்கு அபராதம்

ஹோட்டல்லொன்றிலிருந்து வாங்கிய சோற்றுப் பார்சலில் இறந்த தவளையொன்று இருந்ததை யடுத்து அந்த ஹோட்டல் உரிமையாளருக்கு நீதிமன்றத்தால் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் காலி, கொக்களை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கொக்களைப் பகுதியிலுள்ள மேற்படி ஹோட்டலில் இப் பகுதியிலுள்ள படை முகாமைச் சேர்ந்தவர்கள் பகல் உணவு உண்பது வழக்கம். சம்பவதினமான கடந்த 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த படைமுகாமைச்சேர்ந்த படைவீரரொருவா ஹோட்டல்லல சோறறுப பாா சலை வாங்கி உண் பதற்காகத் திறந்துள்ளார். அவர் உணவருந்திக் கொண்டிருந்தவேளை சோற்றுக்குள் தவளை யொன்று இறந்த நிலையில் கிடந்ததைக் கண்டுள்ளார். இதையடுத்து இது குறித்து ஹோட்டல் உரிமையாளரிடம் புகார் செய்ததுடன் அப்பகுதி சுகாதார அதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளார்.

இதனையடுத்து குறித்த ஹோட்டல் உரிமையாளர்களுக்கு எதிராக காலி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, ஹோட்டல் உரிமையாளர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தார். (அ)

### இராணுவத்தில் இருந்து தப்பி வந்து வீதிச் சோதனைச்சாவடி அமைத்து பணம் பறிக்க முற்பட்டவர் கைது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி வந்து போலியான வீதிச்சோதனைச் சாவடியொன்றை அமைத்து வாகனங்களைச் சோதனையிட்டுப் பணம் பறிக்க முற்பட்ட நபரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இராணுவக் கடமைகளை மேற்கொண்ட நபர் ஒருவரே அண்மையில் அங்கிருந்து தப்பிவந்து இந்தப் போலிவீதிச் சோதனைச் சாவடியை அமைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி பேராதனைப் பகுதியில் திடீர் வீதிச் சோதனைச் சாவடியொன்றை அமைத்துக் குறித்த நபர் மேலும் 3பேரது ஒத்துழைப்புடன் வாகனங்களைச் சோதனையிட்டுள்ளார்

வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரது மோட்டார் சைக்கிளையும் குறித்த முன்னாள் இராணுவ வீரர் அபகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவச் சீருடை அணிந்து போலித் துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்தி இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளைக் குறித்த படைவீரர் மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

### குண்டு வைக்க திட்டமிட்ட குற்றச்சாட்டில் தமிழகத்தில் இரு முஸ்லிம்கள் கைது

(சென்னை)

கடந்த இரண்டு தினங்களில் திருநெல்வேலியைச் சேர்ந்த முஸ்லிம்கள் இருவரை தமிழக பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இறைவன் ஒருவனே என்ற அமைப்பைச்சேர்ந்த இவர்கள், எதிர் வரும் இந்திய சுதந்திர தினத்தன்று தமிழகத்தின் முக்கிய நகரங்களில் குண்டுவெடிப்பை நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள் என்றும், இவர்களில் ஒருவரது வீட்டிலிருந்து வெடி குண்டு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள் என என்றும் பொலிசார் கூறுகின்றனர்.

இதனிடையே சென்னையைச் சேர்ந்த சில முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனதாக அவ் இளைஞர்களின் பெற்றோர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

# நீதிமன்றம் எவருக்கும் கீழ்படியாது பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றம் நிதியமைச்சுக்கோ அல்லது வேறு எந்தவொரு சக்திக்கோ அடிபணிந்து செயற்படாது என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான நீதிமன்றின் உத்தரவுகளை உரிய முறையில் செயற்படுத்தாதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க ஒரு போதும் பின் நிற்கப்போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொனரா கலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதம நீதியர்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அரச சொத்துக்களை அதிகரிப்பதற்கோ அல்லது துஷ்பிரயோகம் செய்வதற்கோ ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் அரச சொத்துக்களை மோசடி செய்த நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜெயசுந்தரவிற்கு உயர் நீதிமன்றம் 5 இலட்சம் ரூபா அபராதம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.12.1962

மறைவு
10.08.2007

திதி:- 30.07.2008

அமரர்
தர்மலிங்கம் சுந்தரமூர்த்தி (சுந்தி)
(இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்)

சுந்திரதீபம் அணைந்து ஓராண்டோடியதோ -நின்
உறவுகள் இங்கே நிதமும் வேதனைக்கீற்றால்
வெந்து நோகுதையா
அப்பா வருவாரோ அவரைக் காண்போமா என்று
உன் மழலைகள் இன்றும் ஏங்குதையா
தேற்றும்வழி தெரியவில்லை தேறும் வழியும்
தெரியவில்லை நிலைகுலைந்து வாடு

மனன் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.

அ/1370



## Calling for Tender - Teaching Hospital, Jaffna Roof to Maternity Ward

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Roof to Maternity Ward, TH, Jaffna up to 10.00am on 09.08.2008 Tender form may be collected from Director, TH, Jaffna up to 05.08.2008 on payment of non refundable deposit of Rs.2,000 /-
2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening Tenders.
3. Tender forms are issued only contractors have been valid registration in Grade M7 and above in the field of Building Constructions and other Institute of Construc tions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contrac tors Association of Sri Lanka (NCCASL).
4. Sealed Tender may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 09.08.2008.
5. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.
6. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.

(C/1372)

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லை யாயினும்,அவன் பையை கிழிக்காமல் விட்டால் போதும்.

–அயர்லாந்து

வலம்புரி

## உயர்தரப் பரீட்சை ஒழுங்காக நடைபெற சகலரும் உதவ வேண்டும்

க.பொ.த (உயர்தரம்) 2008 பரீட்சை ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகின்றது.

பொதுவாக பரீட்சை நடைபெறும் இக்காலத்தில் நாட்டில் ஏதோவொரு வகையில் பிரச்சினையும் நடந்தேறுகின்றது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

பல்கலைக்கழக அனுமதிக்காக நடைபெறும் இப் பரீட்சை மிக முக்கியமாயினும்,வடக்கு கிழக்கு மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதில் பல்வேறு இடர்பாடுகளையும், துன்பங்களையும் சந்தித்தவண்ணமே உள்ளனர்.

பொருளாதார நெருக்கடி,அடிப்படை வசதியின்மை என்ற பல்வேறு கஷ்டங்களைக் கடந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக் காலங்களிலாவது நிம்மதியாக –திருப்தியாக சென்று வருவதற்கான ஏற்பாடு தேவையாகின்றது.

இது விடயத்தில் படைத்தரப்பினரின் ஒத்துழைப்பு கட்டாயமானதாகும். அதாவது படையினரின் வாகனப் போக்குவரத்து, அதற்கான வீதித் தடை என்பன எவ்வகையிலும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்குக் குந்தகமாக அமைந்துவிடக் கூடாது.

வீதித் தடையை படையினர் நடைமுறைப்படுத்தும்போது குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் மரக் குற்றிகளைப் போட்டு வீதி தடுக்கப்படுகிறது.

இதனால் எத்துணை அவசர தேவைகள் இருந்தாலும் படையினரை நாடி நிலைமையை எடுத்துக் கூற முடியாமல் உள்ளது.

குறிப்பாக, திடீரென நோய்வாய்ப்பட்டாலும், வீதித் தடைக்குட்பட்ட மக்கள் எதுவுமே செய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர்.

இந்நிலையில் பரீட்சைக் காலங்களில் வீதித் தடை செய்யும்போது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எவ்வகையிலும் பாதிப்புக்குள்ளாகாத வகையில் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

இதற்கு மேலாக தினந்தோறும் இரவு வேளைகளில் மின்தடை செய்யும் யாழ்ப்பாண மின்சார சபை,உயர்தரப் பரீட்சைக் காலங்களிலாவது மின் தடையை அமுல் படுத்தாமல் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க வேண்டுமென்பது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கோரிக்கையாகும்.

மேலும் பரீட்சை சிறப்பாக –ஒழுங்காக –நேர்த்தியாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது கட்டாயமானதாகும்.

# யுத்தத்திலும் தேர்தலிலும் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதே உண்மை

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்களை வெற்றி கொள்வதற்கு யுத்த வாதம் பிரசாரமாக கையாளப்படுகின்றது.

தேர்தலுக்காக யுத்தமும் யுத்தத்துக்காக தேர்தலும் என்ற நிலையே தற்போது தோற்று விக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் யுத்த வெற்றிகள் அனைத்தும் போலி யானவை. உண்மையான வெற்றியை யுத்தத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியாது என்று இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அரசாங்கத் தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற யுத்தம் மற்றும் தேர்தல்நடவடிக்கைகள் குறித்து கேட்ட போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இது குறித்து கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரிவித்ததாவது,

யுத்தமாக இருந்தாலும் சரி, தேர்தலாக இருந்தாலும் சரி பொதுமக்கள் ஏமாற்றப் படுகின்றனர் என்பதே உண்மையாகும் . இதனை நன்றாக புரிந்து கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது.

தேர்தல்களை வெற்றி கொள்வதற்காக ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பொய்ப்பிரசாரங்களினுடாக போலியான முகங்களைக் காட்டிக் கொண்டிருக் கின்றது. அரசாங்கத்தினதும் ஜனாதி பதியினதும் ஒரே நோக்கம் தேர்தல்களை வெற்றி கொள்வது மட்டுமேயாகும். அதற்காக எதனையும் செய்வ தற்கு தயாராகஇருக்கின்றது. எதிர்க்கட்சிகளை வசைபாடி கள்ள வாக்குகளால் பெட்டிகளை நிரப்பிக் கொள்வதற்கான முன் ஆயத்தங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இதற்காக வடக்கிலே யுத்தத்தை நடத்தி அழிவுகளுக்கு வித்திட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல் யுத்தப் போக்கை தேர்தல் பணிக்காக பயன் படுத்தும் நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலங்களைக் கைப்பற்றி விட்டோம் புலிகளை பலமிழக்கச் செய்துவிட்டோம் என்று கூறுவதெல்லாம் பொய்யானதும் என்று கூறு வதெல்லாம் பொய்யானதும் போலியானதுமான தேர்தல் பிரசாரமாகும். யுத்தம் என்பது போலியான தீர்வுகளையும் பொருத்தமில்லாத வெற்றிகளையும் மட்டுமே பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும். மாறாக உண்மையானவெற்றியை அடைய முடியாது.இன்றைய நிலைவரங்களை நோக்கும் போது யுத்தத்துக்காகவே தேர்தலும் தேர்தலுக்காகவே யுத்தமும் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளமை தெளிவாகின் றது. வடக்குப் பிரச்சினைகள் தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திய போது அங்குள்ள நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட்டன. அம் மக்களின் அடிப்படை உரிமைகள் எந்த அளவில் மறுக்கப் பட்டிருக்கின்றன என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இடது சாரி முன்னணியைப் பொறுத்தவரையில்யுத்தத்தினால் தீர்வு என்பதில் உடன்பாடு இல்லை இது முடியாத காரியமாகும்.

உண்மையான வெற்றிகளையும் தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் நிம்மதி கலந்தத சமாதானம் நிலைபெற வேண்டுமானால் பேச்சுக்களின் அடிப்படையிலேயே அது சாத்தியமானதாக அமையும். மாறாக அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான அரசாங்கத்தின் யுத்த வாதம் ஒரு போதும் சமாதானத்திற்கும் சக வாழ்வுக்கும் இடமளிக்காது .

அரசாங்கத்தின் போலிச் செயற்பாடுகளுக்கு மக்கள் ஏமாற்று நடவடிக்கைகளுக்கும் எதிராக பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். (அ)

# சீபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு இலங்கைக்கு மன்மோகன் அழுத்தம் கொடுப்பார்

## இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பரந்தளவான பொருளாதார ஒப்பந்தத்தில் (சீபா) கையெழுத்திடுமாறு கொழும்பு வரும் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



இலங்கை இந்தியாவுக்கிடையிலான பரந்தளவான பொருளாதார ஒப்பந்தம் (சீபா) தொடர்பி ல் இரு தரப்பு அதிகாரிகள் மட்டத்தில் முற்பகுதியில் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது.

எனவே 15 ஆவது சார்க் மாநாட்டில்கலந்து கொள்வதற்காகஇந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொழும்பு வரும் வேளையில் சீபா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சீபா ஒப்பந்தத்தினால் இலங்கைபொருளாதா ரத்துக்கு எந்த வித அனுகூலமும் சாதகத் தன்மையும் ஏற்படாது எனக்கூறி ஜே.வி.பி. உட்பட எதிர்க்கட்சிகள் இலங்கையில் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இவ்வொப்பந்தத்தின் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில் துறைகள் மோசமான பாதிப்பை எதிர்நோக்க நேரிடுமென ஜே.வி.பி தெரிவித்திருந்தது. சீபா ஒப்பந்தத்தில் கையெழுத்திடு வதற்கு தயாராக இருப்பதாக இம் மாத முற்பகுதியில் இந்திய அரசாங்கம் அறிவித்தது.

எனினும், ஒப்பந்தம் குறித்து தாம் இன்னும் பரிசீலித்து வருவதாக இலங்கை தெரிவித்தது.

இந்நிலையில் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆகஸ்ட் முதலாம் திகதி கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங். இ லங்கை ஜனாதிபதியுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் சீபா ஒப்பந்தம் முக்கிய இடத்தைப்பிடிக்கும் எனவும் சீபா ஒப்பந்தத்தில் கையெழுத்திடு மாறு அவர்இலங்கை அரசாங்கத் துக்கு அழுத்தத்தை கொடுப்பார் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி யொருவர் தெரிவித்தார். (அ)

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா -02.08.2008

### உங்கள் உதிரம் பிறர் உயிர் காக்கும்



**இரத்ததானம் –உயிர் காப்பது, உன்னதமானது**

சடுதியான பெருமளவான குருதிப் பெருக் கினால் உயிர் பிரிவதை உடனடியாக ரத்தம் ஏற்றினால் தடுக்கலாம்.

குருதி உறையா நோய், குருதிச் சோகை டெங்குக் காய்ச்சல் போன்றவற்றிற்கு குருதியை பல கூறுகளாகப் பிரித்து ஏற்றி பலரின் வாழ்க்கையை நீடிக்கலாம் வளமாக்கலாம்.

வலிமை மிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு புற்று நோயாளர்களின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்தக் கூறுகளை ஏற்றி வாழ்க்கைக் காலத்தை நீடிக்கலாம்.

பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்றப்படலாம்.

*இரத்தவங்கி,*
*போதனா வைத்தியசாலை ,*
*யாழ்ப்பாணம்.*

தொ.பே. 021 222 3063

ஓலைச் சுவடிகள் 68

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### ஆரத்தி எடுப்பதன் பின்னுள்ள இரகசியம் என்ன?

விஞ்ஞானமும் நவீன வாதமும் முற்போக்கு வாதமும் எல்லாம் நம் சமூகத்தில மிகவும் செல்வாக்கு செலுத்தியிருந்த போதிலும் சில நம்பிக்கைகள் இன்றும் தவிர்க்க முடியாதவை யாக நீடித்து நிற்கின்றன.இதில் ஒன்று தான் ஆரத்தி எடுப்பது. தூரத்துப் பயணங்களை முடித்து வரும் குடும்பத்தினர், திருமணம் முடித்து மணமகன் வீட்டுக்கு வரும் தம்பதிகள் , மகப்பேறு முடிந்திருக்கும் தாய் முதலியயோரைப் பொதுவாக ஆரத்தி எடுப்பதுண்டு.

தண்ணீரில் மஞ்சள் அரைத்துச் சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு சேர்க்கின்றனர். மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த தண்ணீருக்கு சிவப்பு நிறம் வருகின்றது. இதை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து அதற்கு இருப்பக்கங்களிலும் இரண்டு தீச்சுடர்கள் எழுப்பி சம்பந்தப்பட்ட நபரின் உடலுக்கு மூன்று முறை சுற்றி விடுவதையே ஆரத்தி என்று கூறுகின்றோம். மஞ்சள் மற்றும் சுண்ணாம்புக்கு கிருமிகளை அழிக்கும் திறன் உண்டு. என்பதை நாம் கண்டறிந்துள்ளோம். அந்தநபரின் மேல் வந்து சேர்ந்திருக்கும் விச அணுக்களை அழிப்பதே ஆரத்தியின் உத்தேசம்.

# புதியதோர் இலங்கையை உருவாக்க முனைந்த மஹிந்த அரசு எரிபொருளின் விலையை 13 தடவைகள் அதிகரித்துள்ளது

## வேறெதனையும் சாதிக்கவில்லை என்கிறார் எம்.பி. ஜயந்த கருணாதிலக்

(பலாங்கொடை)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மஹிந்த சிந்தனை என்ற நூலில் பல்வேறு விதமான வாக்குறுதிகளையும் வழங்கினார்.

ஆட்சி அமைத்ததும் அவற்றை நிறைவேற்றுவதாக உறுதியளித்து அரசாங்கத்தை கைப்பற்றிக்கொண்டார். புதியதோர் இலங்கையை உருவாக்குவதாகக்கூறிய மஹிந்தவின் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை 13 தடவைகள் அதிகரிப்பு செய்துள்ளது.

இதனைத் தவிர வேறு எதனை சாதித்துள்ளது என்று கேட்கவிரும்புகிறேன் என ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அண்மையில் பலாங்கொடையில் நடைபெற்ற பலாங்கொடை நகர வர்த்தக சமூகத்தினருடனான சந்திப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சப்ரகமுவ மாகாணத்திற்கான முதன்மை வேட்பாளர் ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கௌரவமான சமாதானத்தை கொண்டுவருவதாகக் கூறினார்.

நாட்டிலே சமாதானம் வந்து விட்டதா? அல்லது கௌரவம் தான் வந்துவிட்டதா? எது வராவிட்டாலும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் மாத்திரம் வானளவிற்கு உயர்வடைந்துள்ளன. இதனால் எமது நாட்டு மக்கள் பட்டினியால் வாட வேண்டிய நிலையும் த வர்த்தகர்கள் வியாபாரம் செய்ய முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

இதுவா புதிய இலங்கை என அரசாங்கத்தை கேட்கிறேன்.

இரத்தினபுரியில் சிறு தேயிலைத்தோட்ட உற்பத்தி மற்றும் இரத்தினக்கல் வியாபாரம் என்பன படு பாதாளத்தில் உள்ளதாக பலரும் என்னிடம் தெரிவித்தனர். அவர்களிடம் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இலங்கை வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்த கூட்டமைப்பு ஆட்சியமைத்தபோதும் பொதுமக்களும் வர்த்தக சமூகமும் பெரும் கஷ்டங்களையே சந்தித்து வந்துள்ளனர்.

இன்று மக்கள் மீதுள்ள பாரிய பொருளாதார சுமைகளுக்கு பிரதான காரணம் மஹிந்த அரசாங்கத்தின் 110பேரைக் கொண்ட பெரிய அமைச்சரவையாகும்.

இவர்களின் செலவுகள் அனைத்தும் ஆடம்பர செலவுகள், வெளி நாட்டுப்பயணங்கள் என்பவற்றுக்கென் பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது. இவற்றின் சுமைகளைத்தான் நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இருந்து விடுபட வேண்டுமானால் மஹிந்த அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப வேண்டும். அதனை சப்ரகமுவ விலிருந்து ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.

அன்று மாகாண சபை முறை வேண்டாம் என ஆர்ப்பாட்டம் புரிந்த சுதந்திரக் கட்சிக்காரர்கள் இன்று அவற்றுக்கான தேர்தலில் போட்டியிடுகின்றனர். இம்முறை சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களில் நாம் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

அன்றாடம் எமது கட்சியைச் சுற்றி ஏனைய கட்சிக்காரர்கள் வந்து சேர்ந்த வண்ணமே உள்ளனர். இன்று பலாங்கொடை நகர வர்த்தக சமூகம் திரண்டிருப்பதனை பார்க்கும் போது எமது உறுதி மேலும் வலுவடைந்துள்ளது என்றார். (அ)

# மக்களின் தொடர்ச்சியான கடும் எதிர்ப்பு காரணமாக வீரவில விமான நிலைய நிர்மானம் மத்தலவுக்கு மாற்றம்

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ உத்தரவு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை வீரவில பகுதியில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இரண்டாவது சர்வதேச விமான நிலையததை மத்தல பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைமாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றதன் பின்னரே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். வீரவிலவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 1150 ஹெக்டெயர் நிலம் சுவீகரிக்கப்பட்டது. இதில் நெல் மற்றும் விவசாய நிலங்களும் அடங்குகின்றன. அத்துடன் 325 வீடுகளும் உடைக்கப்பட்டன. இதனால், அப் பிரதேச மக்கள் விமான நிலையம் நிர்மாணிப்பதற்கு கடும் எதிர்ப்புக்களை தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையிலேயே, அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அம்பாந்தோட்டை மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு கூடிய பிரதேச வாசிகள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்ததுடன் விமான நிலையத்தை வேறு பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதற்குத் தாங்கள் ஒத்துழைப்பு நல்குவதாகவும் அமைச்சரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதனையடுத்தே, வீரவிலவில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள விமானநிலையத்தை மத்தலவில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார். (அ)

# இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்த இஸ்ரேல் தீர்மானம்

(கொழும்பு)

ஈரானுடனான நெருக்கமான உறவுகளை இலங்கை அரசு ஏற்படுத்தி வருவதனால் அதற்கான படைத்துறை உதவிகளை நிறுத்த இஸ்ரேல் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஈரான் அரசுடன் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நெருக்கமான உறவுகளை அடுத்து இலங்கைக்கான படைத்துறை உதவிகளை இஸ்ரேல் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு அமைய இஸ்ரேலின் படைத்துறை உற்பத்தி நிறுவனம் (The israeli Millitary industrial Complex) படைத்துறை ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நிறுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் நாடுகளில் ஈரான் முதல் இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பொருளாதார முதலீடுகள் மற்றும் படைத்துறை உதவிகளை அது மேற்கொண்டு வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவினால் ஈரானுடன் கொண்டுள்ள உறவை மறைக்க முடியவில்லை அது வெளிப்படையான ஒன்று. இலங்கை அரசின் இந்த புதிய உறவு இஸ்ரேலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசிடம் உள்ள இஸ்ரேலின் நவீன ஆயுதங்களின் தொழில்நுட்பத்தை ஈரான் அறிந்து கொள்ளலாம் என்ற அச்சம் இஸ்ரேல் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனிடையே கொழும்புக்கான ஆயுத விநியோகத்தை இஸ்ரேல் அதிகாரபூர்வமாக நிறுத்தியுள்ள போதும் ஏற்கனவே வழங்கிய ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்களை தொடர்ந்து வழங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீனாவில் புதிதாக பிறந்த நான்கு 'பண்டா' கரடிக்குட்டிகள்



சீனாவில் 14மணி நேர காலப் பகுதிக்குள் 4 பண்டா கரடிக் குட்டிகள் பிறந்துள்ளன. இது அருகி வரும் பண்டா கரடி இனத்தின் பெருக்கத்தை ஊக்குவிப்பதாக உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது. தென் மேற்கு சிசுவான் மாகாணத்திலுள்ள செங்து பண்டா ஆராய்ச்சி நிலையத்தில், 9வயதான கியுவான் என்ற பண்டாவுக்கு இரு குட்டிகளும் 8 வயதான செங்கொங் மற்றும் ஷுஷுவிற்கு தலா ஒரு குட்டியும் பிறந்துள்ளன. (அ)

# ஏ.எம்.டபிள்யூ. நிறுவனத்தின் 71 வீதமான பங்குகளை துபாய் நிறுவனம் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கையில் வாகனங்களை சந்தைப்படுத்திவரும் அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸ் (ஏ.எம்.டபிள்யூ) நிறுவனத்தின் 71.15 வீதமான பங்குகளை துபாயைச் சேர்ந்த அல் -புற்றைம் (Al-F ttaim) நிறுவனம் தன்வசமாக்கியுள்ளது.

உள்நாட்டைச் சேர்ந்த இரு நிறுவனங்களின் வசமிருந்த அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸ் நிறுவனத்தின் 39 மில்லியன் பங்குகளையே தலா 174 ரூபா 50 சதம் வீதம் 7 பில்லியன் ரூபாவினை செலுத்தி அல்-புற்றைம் நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது.

இலங்கையில் நிசான் மற்றும் மாருதி மோட்டார் வாகனங்கள் யமஹா மோட்டார் சைக்கிள் உட்பட பல்வேறு வாகனங்களின் ஏக விநியோகஸ்தராக திகழும் அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸ் நிறுவனத்தின் பங்குகள் இரண்டாம் தர பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது.

இதன்போது அசோசியேட்டட் எலக்ட்ரிக்கல் கோப்பரேசன் வசமிருந்த 51.15 வீதமான பங்குகளை 6.91 பில்லியன் ரூபாவை செலுத்தியும் ஜோன்கீல்ஸ் நிறுவனத்திடமிருந்த 20 வீதமான பங்குகளை 1.3 பில்லியன் ரூபாவை செலுத்தியும் அல் -புற்றைம் நிறுவனம் உரிமையாக்கிக் கொண்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பங்குகள் விற்பனை செய்யப்பட்ட அதே விலையில் அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸின் பங்குகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப் படுமாயின் மேலும் அதிகமான பங்குகளை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டு அல் புற்றைம் நிறுவனம் தமது சட்ட ஆலோசகர் ஊடாக கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தடுப்பு முகாமிலுள்ள 44 நாய்களும் மாநாடு முடிந்த பின் விடுவிக்கப்படும்

## மாநகரசபை வைத்திய அதிகாரி தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தை அண்மித்த பகுதிகளிலும் விஹாரமகாதேவி பூங்காவை அண்மித்த பகுதிகளிலும் சுற்றித்திரிந்த 44 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு பொரளை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நாய்கள் கொல்லப்படும் என்பது விஷமத்தனமான பிரசாரமாகும். சார்க் மாநாடு முடிந்தவுடன் பிடிக்கப்பட்ட இடங்களில் நாய்கள் விடுவிக்கப்படும் என்று கொழும்பு மாநகரசபை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் இலேபெரும தெரிவித்தார்.

இது தொடர்பாக டாக்டர் இலேபெரும மேலும் தகவல் தருகையில் கூறியதாவது, சார்க் மாநாடு நடைபெறும் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தை அண்டிய பகுதிகளில் 25 நாய்களும் விஹார மகாதேவி பூங்காவை அண்மித்த பகுதிகளில் 19நாய்களும் பிடிக்கப்பட்டு பொரளை நாய் தடுப்பு முகாமில் தனித்தனி கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ளன.

அவைகளுக்கு உணவு வழங்குவதோடு அனைத்து நாய்களுக்கும் இனப்பெருக்க தடுப்பு மற்றும் விசர் நோய்த் தடுப்பு ஊசிகளும் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாயையேனும் கொலை செய்ய மாட்டோம். கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் பல இலட்சம் ரூபா செலவழித்து புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தண்ணீர் பந்தல்களை நாய்கள் சேதப்படுத்தியதன் காரணமாகவே முதல்வரின் உத்தரவுக்கமைய அங்கு நாய்கள் பிடிக்கப்பட்டன.

தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட நாய்கள் சார்க் மாநாடு முடிந்ததும் அவைகள் வாழ்ந்த அந்த இடங்களில் விடுதலை செய்யப்படும். (அ)

# ஐ.சீ.சி டெஸ்ட் தரவரிசையில் துடுப்பாட்டத்தில் சந்தர்போல் முதலிடம்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் மேற்கிந்திய தீவுகள் வீரர் சந்தர்போல் முதலிடம் பிடித்துள்ளார். இலங்கையின் சங்கக்கார இரண்டாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான வீரர்கள் தரவரிசைப்பட்டியலை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

டெஸ்ட் தரவரிசைப்பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வரிசையில் இலங்கை வீரர் சங்கக்கார 2-வது இடத்திற்கு தள்ளப்பட்டு மேற்கிந்திய தீவுகள் வீரர் சந்தர்போல் முதலிடம் பிடித்துள்ளார்.

சந்தர்போல் முதல் முறையாக தரவரிசைப்பட்டியலில் முதலிடத்திற்கு வந்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலியா,தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடியதன் மூலம் சந்தர்போல் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சோபிக்கத் தவறிய சங்கக்கார இரண்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரா மைக்கல் ஹசியும் இரண்டாவது இடத்தில் உள்ளார். எனினும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சங்கக்கார சிறப்பாக ஆடினால் மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க வாய்ப்புள்ளது.

இந்திய வீரர்களில் டெண்டுல்கர் 15-வது இடத்திலும்,ராவிட் 19-வது இடத்திலும் சேவாக் மற்றும் கங்குலி 20-வது இடத்திற்கு வெளியேயும் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களில் முரளிதரன் தொடர்ந்து முதல் இடம் வகிக்கிறார். அவர்900 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றிருக்கிறார். (5)

# இரண்டாவது டெஸ்ட் போட்டி; இந்திய அணிக்கு சவாலாக அமையும்

## முரளிதரன் எச்சரிக்கை

(கொழும்பு)

கும்ளே தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3டெஸ்ட் போட்டித் தொடரில் கொழும்பில் நடத்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை தழுவியது.

இந்தியா-இலங்கை இடையிலான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலியில் நாளை ஆரம்பமாகிறது.

இந்த நிலையில் முதல் டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்டுக்களை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த சுழற்ப்பந்து வீச்சாளர் முரளிதரன் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது,

காலியில் நாங்கள் வழக்கமாக சிறப்பாக கிரிக்கெட் விளையாடி வருகின்றோம். 2000 முதல் 2003 ஆம் ஆண்டுவரை இங்கு நடந்த 5 டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ச்சியாக நாங்கள் வெற்றி பெற்றோம்.

அங்கு இறுதியாக நடந்த 4 டெஸ்ட் போட்டியிலும் 3 ஆட்டங்கள் சமனிலையானது.

அத்தோடு அந்த ஆட்டங்களில் எல்லாம் இலங்கை அணியின் கையே ஓங்கி இருந்தது. எங்களது எதிரணியினர் சமநிலைக்காக போராடினார்கள்.

மோசமான தட்பவெப்ப நிலையால் வெற்றியைப் பெற முடியாமல் போனது.

எனவே காலிப் போட்டி இந்திய அணிக்கு கடும் சவாலாக இருக்கும். இங்கிலாந்துக்கு எதிராக டிசம்பர் மாதத்தில் இங்கு நடந்த இறுதி டெஸ்டில் பலத்த மழை பெய்திருந்தது.

சுனாமிக்கு பின்னர் நடந்த முதல் போட்டியான இதில் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கும், சுழல் பந்துவீச்சுக்கும் உதவிகரமாக இருந்தது. இவ்வாறு முரளிதரன் கூறியுள்ளார். (5)

## தம்மிக்க பிரசாத்துக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியில் வேகப் பந்துவீச்சாளர் தம்மிக்க பிரசாத் இணைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி காலியில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இதில் மேலதிக வேகப்பந்துவீச்சாளராகவே தம்மிக்க பிரசாத் இடம்பிடித்துள்ளார்.

25 வயதான தம்மிக்க பிரசாத் இந்தியாவுக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் சிறப்பாக செயற்பட்டு 58 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை 41 முதல் தரப் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 129 விக்கெட்டுக்களை பதம் பார்த்துள்ளார்.

அத்துடன் அவர் கடந்த 2006 ஆம் ஆண்டில் இலங்கைக்காக 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். (5)

# பீச் கால்பந்து உலக கோப்பை; 12-வது முறையாக பிரேஸில் சம்பியன்



(மார்செய்லி)

பீச் கால்பந்து உலககோப்பை இறுதிப் போட்டியில் பிரேசில் அணி, இத்தாலியை 5-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியன் ஆனது.

பிரான்சின் மார்செய்லியில் பிபா பீச் கால்பந்து உலககோப்பை தொடர் நடந்தது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிபோட்டியில் பிரேசில் அணி, இத்தாலி அணியை எதிர் கொண்டது.

பிரேசில் வீரர் புருனோ 9ஆவது நிமிடத்தில் முதல் கோலடித்து அசத்தினார்.

பின்னர் 15ஆவது நிமிடத்தில் இவர் இரண்டாவது கோலடித்து அணியை 2-0 என முன்னிலை பெறச்செய்தார்.

தொடர்ந்து அசத்திய பிரேஸிலின் சிட்னி 21ஆவது மற்றும் 23ஆவது நிமிடத்தில் கோலடித்தார்.

28ஆவது நிமிடத்தில் ஆன்ட்ரி கோலடிக்க முதல் பாதியில் பிரேஸில் 5-0 என முன்னிலை வகித்தது.

இரண்டவது பாதியில் சுதாரித்து ஆடிய இத்தாலியின் பால்மசி, பாஸ்குவாலி, மாரடோனா தலா ஒருகோல் அடித்து நம்பிக்கை தந்தனர்.

பின்னர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரேசில் வீரர்களிடம், இத்தாலியின் கோல் வேட்டை முடிபுக்கு வந்தது.

இறுதியில் பிரேசில் அணி, இத்தாலியை 5-3என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இதன் மூலம் சம்பியன் பீச் கால்பந்து உலகக் கோப்பையை 12ஆவது முறையாக கைப்பற்றியது.

மூன்றாவது இடத்திற்கான போட்டியில் போர்த்துக்கல் அணி, ஸ்பெயினை5-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 3ஆவது இடம் பிடித்தது.

தொடரில் சிறப்பாக ஆடிய ஸ்பெயின் வீரர் அமரேலிக்கு தங்கப்பந்து வழங்கப்பட்டது. (5)

# ஒலிம்பிக்கின் ஆரம்பம்



ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு இன்னும் 09 நாட்களே உள்ளன. இதற்காக பிரமாண்ட ஏற்பாடுகளை செய்து வருகிறது சீனா.

முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி 1896ஆம் ஆண்டு ஏதென்ஸில் (கிரீஸ்) ஆரம்பமானது. அது முதல் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இடையில் 2 முறை போர் காரணமாக நடைபெறவில்லை. இந்த வரிசையில் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறவுள்ளது 29-வது ஒலிம்பிக் போட்டியாகும்.

எனினும் பண்டைய காலத்திலும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுள்ளன. போட்டிக்கு முன்பு பன்றிய்ய பலியிட்டு அதன் இரத்தத்தைத் தொட்டு நெற்றியில் வைத்த பின்னர் வீரர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வது, பிறந்த மேனியுடன் போட்டியில் பங்கேற்பது போன்ற வித்தியாசமான நிகழ்வுகள் பண்டையகால ஒலிம்பிக்கில் இருந்துள்ளன.

ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பமாகிய காலம் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

முதல் முதலாக ஆரம்பமாகிய ஒலிம்பிக் போட்டி கி.மு.1253 ஆம் ஆண்டுக்கும் கி.மு 884ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் இருக்கவேண்டும் என அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் கி.மு.776ஆம் ஆண்டு நடந்த பந்தயத்தில் இருந்துதான் வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதாக தெரிகிறது.

கிரேக்க நாட்டிலுள்ள புனிதமான இடம் ஒலிம்பியா. அங்கு தோன்றிய விளையாட்டுக்களைத்தான் ஒலிம்பிக் பந்தயங்கள் என்று அந்நாட்டு மக்கள் அழைத்துள்ளனர்.

கிரேக்க நாட்டில் கடவுள்களுக்கு பஞ்சமில்லை. வீரத்தில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையை விட மதத்தில் ஆழ்ந்த பற்றும் அதிகமான நம்பிக்கையும் வைத்திருந்துள்ளனர்.




அவர்களின் தலைமைக்கடவுள் சியஸ். அக்கோயிலின் முன்னே அமைக்கப்பெற்ற விளையாட்டு அரங்கிலேதான், அத்தனை ஒலிம்பிக் பந்தயங்களும் நடந்தேறியுள்ளன.

ஒலிம்பிக் பந்தயமென்றால் கிரேக்க நாட்டு மக்களுக்கு மிகவும் விரும்பம். பந்தயம் நடக்கவிருக்கும் நாளுக்கு பல மாதங்களுக்கு முன்பே அவர்கள் தங்களை ஆயத்தம் செய்து கொண்டு விடுவார்கள்.

ஒலிம்பிக் போட்டியை பார்ப்பதை புனிதமான இறைவன் ஆலயத்திற்கு போய்வரும் மதச் சம்பிரதாயம் போன்று அவர்கள் எண்ணியுள்ளனர்.போட்டிகள் ஏப்ரல் முதல் யூலை வரையிலான இடைப்பட்ட காலத்தி லேயே நடந் துள்ளன.




அப்போது மிகச் சில விளையாட்டுக்களில் குறிப்பிடும் படியான நாடுகள் மட்டுமே பங்கு பற்றியுள்ளன. அதிலும் கிரேக்க மொழி பேசுபவர்கள் மட்டுமே விளையாட முடியும் என்ற நிலை இருந்துள்ளது.

தற்போதுள்ள முறை மாதிரியல்லாமல் அனைத்துப் போட்டிகளும் கிரீஸிலுள்ள ஒலிம்பியாவிலேயே நடைபெற்றுள்ளன.

**பாலா**

எங்கிருந்து ஒலிம்பிக் போட்டிகள் வந்தன? ஒலிம்பியாவில் மட்டும் போட்டிகள் நடைபெறக் காரணம்என்ன? யாரெல்லாம் பங்கேற்றார்கள்? மகளிருக்கு போட்டிகள் இருந்ததா?என்ன மாதிரி போட்டிகள் நடைபெற்றன? என்ன மாதிரி பரிசுகள் வழங்கப்பட்டன போன்ற கேள்விகளுக்கெல்லாம் பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் ஆதாரபூர்வமாக விடைகாணமுடியாதது துரதிர்ஷ்டமே. (5)

# மனித உரிமை மீறல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் கடும் தண்டனை

## ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

முக்கியமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூதூரில் 17 அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான இடைக்கால விசாரணை அறிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் நிஷங்க உடலகம கூறியுள்ளார்.

எவ்வித இடையூறுகளுமின்றி ஆணைக் குழு தொடர்ச்சியாகக் கூடியிருந்தால் விசாரணைகளைத் துரிதமாக முடித்திருக்க முடியும். எனினும் ஆணைக் குழு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செயற்பட்டு வருவதால் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக விசாரணைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது சார்க் மாநாட்டுக்காக அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான சரியான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் அந்தப் பரிந்துரைகள் முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் உட்பட ஏனைய குற்றச்செயல்களின் குற்றவாளிகளுக்கும் ஓர் எச்சரிக்கையாக அமையும் எனவும் முன்னாள் நீதிபதி கூறினார்.

ஆணைக் குழுவின் உறுப்பினர்களான கலாநிதி நேசையா மற்றும் ஜாவிட் யூசுப் ஆகியோர் விலகியதைத் தொடர்ந்து ஆணைக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைந்தது.

எனினும் இதனால் ஆணைக் குழுவின் செயற்பாட்டிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நிஷங்க உடலகம மேலும் தெரிவித்தார். (ச-5)

# இழந்த நிலங்களை மீட்டு இலட்சியத்தை அடைவோம்

## கடற்புலிகளின் துணைத் தளபதி அறிவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ள எமது நிலப் பகுதிகளை மீட்டெடுத்து விடுதலைக் குறிக்கோளை உறுதியாக அடைவோம் என்று கடற்புலிகளின் துணைத் தளபதி விநாயகம் தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஒன்று கூடலில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் முன்னெடுப்புக்களால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தமது தொழில்களை இழந்து இடம்பெயர்ந்துள்ள கடற்றொழிலாளர்கள் ஆயிரக் கணக்கானோர் மர நிழல்களின் கீழ் வாழும் நிலை உருவாகியுள்ளது.

பலகோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களை மக்கள் இழந்துள்ளனர். இராணுவத்தினரின் திட்டமிட்ட போர் நடவடிக்கைகளினால் பெரும் அவலங்களை சந்தித்துள்ள எமது மக்கள் ஏதிலிகளாக வாழும் அவலத்தைச் சிங்கள அரசு உருவாக்கியுள்ளது.

எமது மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட நிலப் பகுதிகளை மீட்டெடுத்து விடுதலைக்குறிக்கோளை அடைந்து கொள்வதுதான் தமிழர்களுக்குள்ள ஒரே முடிபு. இதனை நாம் செய்வோம் என்றார். (ச-5)

# சட்டத்தின் முன்னால் அனைவரும் சமன்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டத்தின் முன்னால் யாவரும் சமன் எனவும் ஜனாதிபதிக்கும் அழைப்பாணை விடுக்க முடியும் எனவும் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா குறிப்பிட்டுள்ளார்.

17-வது திருத்தத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட அரசியல் சாசன சபை நிறுவப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மாஅதிபரின் சார்பில் ஆஜரான பதில் சொலிசிட்டர் ஜெனரல், நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதிக்கு அழைப்பாணைப் பிறப்பிக்க முடியாது என நீதிமன்றில் தெரிவித்தார். இதன்போதே பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இவ்வாறு கூறினார். (ச-5)

## வெள்ளவத்...

செய்யப்பட்டனர்.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியவர்களும் இப் பகுதியில் தங்கியிருப்பதற்கான முறையான காரணத்தைத் தெரிவிக்காதவர்களுமே கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## ஓகஸ்ட...

யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரசாரங்களைப் புறக்கணிக்குமாறு பொது நிர்வாக அமைச்சு பொதுமக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் மேலதிக செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கூடாரி...

கொடிகாமம் பிரதேசங்களைச் சேர்ந்த செல்லக்கண்டு யசோதரன், கே.கபிலன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாகக் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்திலும் மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பகத்திலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச-5)

## இளைஞன்...

பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மாதா கோவில் வீதி, தும்பளையைச் சேர்ந்த தங்கவேல் பாலகிருஷ்ணன் (வயது-19) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறை நகரின் முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்கள் சந்திக்கும் இடத்துக்கு அண்மையில் மீன் சந்தைக்கு அருகிலுள்ள கடைக்கு முன்பாக இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ச-52)

## 10 நாள்க...

பெற்றபோதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

14.09.2007 அன்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட தியாகராஜா மோகனரூபன் கடந்த 11 மாதங்களாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கைதும் தடுத்து வைப்பும் சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றில் மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய சட்டத்தரணி மூலம் சத்தியக் கடதாசியைக் கையொப்பம் இட அனுமதி கோரிய போது அதற்குப் புலன்ாய்வுப் பிரிவின் அத்தியட்சகர் அனுமதி வழங்கினார்.

ஆனால் அதன் பொறுப்பதிகாரி அனுமதி வழங்க மறுத்ததையடுத்து சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜாவினால் இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுவில் முதலாம் பிரதிவாதியாக பிரசன்னா டி. அல்விஸ் பொறுப்பதிகாரி பயங்கரவாதப் பிரிவு, 2 ஆம்,3 ஆம், 4 ஆம், 5 ஆம் பிரதிவாதிகளாக அதன் அத்தியட்சகர், பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். (ச-5)

## அதிபர்...

பட்டவர்களின் விபரங்களைக் கல்வி அமைச்சு அனுப்பி வைத்தவுடன் அவர்களுக்கான நியமனங்களை வட மாகாணக் கல்வி அமைச்சு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெரும்பாலும் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இந் நியமனங்கள் வழங்கப்பட்டு விடும் எனவும் அவர் கூறினார். இதேவேளை வட மாகாணக் கல்வி அமைச்சினால் கடந்த மாதம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் மூன்றாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் வழங்கப்படும் எனவும் வட மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகக் கடந்த மாதம் நடாத்தப்பட்ட பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களின் விபரம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எனவும் எனினும் அக் காலப் பகுதியில் நேர்முகப் பரீட்சையில் தோற்ற முடியாமல் போயிருந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரமே நடைபெற்றது.

இவ்வாறு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் விபரங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதனால் அவர்களின் விபரங்களும் இணைக்கப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் மூன்றாம் தவணைக்காகப் பாடசாலை ஆரம்பிக்கும் போது ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## அமைச்சர் ஆறுமுகன் தொண்ட...

தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் சதாசிவம் கடந்த 2000 ஆம் ஆண்டு கட்சியை விட்டு வெளியேறிய போது அவர் நுவரெலியாவிலுள்ள கட்சி அலுவலகத்தைப் பயன்படுத்தக் கூடாது எனக் கட்சி தீர்மானித்தது.

இத் தீர்மானத்தை எதிர்த்து சதாசிவம் நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இதற்கு எதிராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து இடைக்கால உத்தரவொன்றைப் பெற்றது என அக் கட்சியின் பேச்சாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

அந்த உத்தரவுக்கமைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியாவிலுள்ள அலுவலகத்தைப் பயன்படுத்தியது. எனினும் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவை அவமதித்ததாகக் கூறி நுவரெலியா நீதிமன்றம் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு ஆறு மாதங்கள் ஒத்தி வைக்கப்பட்ட மூன்று மாதச் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது எனக் கூறினார்.

எனினும் இந்தத் தீர்ப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யவிருப்பதாகவும் அக் கட்சியின் பேச்சாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார். (ச-5)

## மடுத் தேவாலயத்துக்கு...

தாங்களே இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என இராணுவத்தினரிடம் கேட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதி வழங்கப்படாமல் தமக்கும் தெரிவிக்காமல் இராணுவத்தினரே அனைத்து வேலைகளையும் செய்திருப்பதை அங்கு த்ாங்கள் கண்டதாகவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தமிழோசையிடம் தெரிவித்தார்.

எனினும் மடுக்கோவில் இன்னும் தம்மிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை பாதுகாப்புக்காக விடுதலைப்புலிகளின் பிரதேசமாகிய தேவன்பிட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த மடு மாதாவின் திருச்சொரூபமும் கடந்த வாரம் மன்னார் ஆயர் இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் தற்போது மடுக் கோவில் ஆயர் இல்லத்திடம் ஒப்படைக்கப்படாததன் காரணமாக ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடுக் கோவிலின் ஆவணி மாதத் திருவிழா இம்முறை நடைபெறுவதற்கான சாத்தியக் கூறு இல்லை என்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஓகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடுக் கோவிலின் ஆவணி மாதத் திருவிழா இம் முறை நடைபெறுவதற்குரிய சாத்தியம் இல்லை எனத் தெரிவித்துள்ள மன்னார் ஆயர், திருவிழா நடைபெறும் போது அங்கு கூடவுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் மடுக் கோவில் பகுதியை யுத்தமற்ற சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள மடு மாதாவின் திருச் சொரூபம் மடுக் கோவிலுக்குக் கொண்டு செல்லப்படும் வரையில் ஆயர் இல்லத்திலேயே வைக்கப்பட்டிருக்கும் என்றும் மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அரசியல் தீர்வுக்காகவே...

அரசியல் மற்றும் இராணுவ பிரிவுகளிடையே சமத்துவத்தைப் பேணுவது குறித்த கொள்கையைத் தீர்மானிக்க வேண்டிய முக்கிய சவால் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தை விடுவிப்பதற்கு இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காவிட்டால் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வாக்களிக்காமல் இருந்த கிழக்கு மாகாண மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியாது போயிருக்கும்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு மாதங்களில் விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வர முயற்சித்தார்.

இரண்டு தடவைகள் அவர் அரசாங்கக் குழுவை ஜெனீவாவுக்கும் ஒஸ்லோவுக்கும் அனுப்பியிருந்தார். எனினும் அந்தப் பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமையவில்லை.

மாவிலாறு அணையிலிருந்து நீரை விடுதலைப்புலிகள் துண்டித்ததன் பின்னரே இராணுவ ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு அரசாங்கம் உறுதியாக இருக்கின்ற போதும் கடந்த காலங்களைப் போலல்லாமல் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2002, 2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஏற்பட்ட பிழைகளைத் தவிர்ப்பது பற்றி ஆராய்ந்து செயற்பட வேண்டியுள்ளது.

அனைத்துத் தரப்பினருக்குமிடையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கு 13 -வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது சிறந்த தீர்வாக அமையும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,

நாட்டின் பொருளாதாரம் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். (ச-5)

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
வெற்றித் தேர்வு.திருமலை.எஸ்.கணேசலிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர். திருகோணமலை.
தரம்:5வெற்றித்தேர்வு-21,22,23,24
கணேசலிங்கம் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்.
கருத்தரங்கு பற்றிய விபரங்கள் வெற்றித்தேர்வு 23,24ல்
விரைவாகப் பெற்று பதிவுசெய்யுங்கள். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
சகல புத்தகசாலைகளிலும்.
இளங்கலைஞர் மண்டபம். நல்லூர்.2.8.2008
துரையப்பாமண்டபம்.ஆனைக்கோட்டை.3.8.2008
பிரதேச சபை மண்டபம்.மாலுசந்தி.4.8.2008
காலை:8.30முதல் மாலை:2.30 வரை
மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.